CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

I

க்ருஷ்ண யஜுர் வேத ஸாரம்

முதல் காண்டம்

இரண்டாவது பதிப்பு

(இலவச வெளியீடு)

2005

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ருஷ்ண
யஜுர் வேத ஸாரம்

KRISHNA YAJUR VEDA
1ST KANDA

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.

2005

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சமர்ப்பணம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த 68-வது பீடாதிபதி, வேத சாஸ்திரங்களை நன்கு ஊக்குவித்தவர், வேத சாஸ்திரவிற்பன்னர்களை நன்கு ஆதரித்தவர், சிஷ்ய கோடிகளுக்கு தர்மத்தை எளிதில் எடுத்துக் கூறி அநுஷ்டானம் செய்வித்தவர், காஞ்சி பரமாச்சாரியார் என்று பிரஸித்தி பெற்ற ஸ்ரீ ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

இந்த புத்தகத்தின் கை எழுத்து நகல் ஸ்ரீமுக ஸூ விருச்சிக மீ 29 உ செவ்வாய்கிழமை (14-12-93) அன்று ஸ்ரீ பெரியவாள் முன் வைத்து அநுக்ரஹம் பெற்றது. இப்புத்தகத்தை அந்த மஹா பெரிய ஜீவன் முக்தருக்கு சமர்ப்பணம் செய்கிறேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஶ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஶ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஶ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
ஶ்ரீமடம் ஸமஸ்தானம்,
காஞ்சிபுரம்.

தலைமை அலுவலகம்: 1, சாலைத்தெரு, பெரிய காஞ்சிபுரம் - 2
போன் : 2115

தேதி 14-12-93

நமக்கு வைதிகர்கள் என்று பெயர் ஏற்பட்டிருப்பதற்கு காரணம் வேதங்களில் சொல்லப் பட்டுள்ள கர்மாக்களை நன்கு அனுஷ்டிப்பதுதான். கர்மாக்களின் உபயோகப்படும் மந்த்ர பாகங்களின் பொருள்களை உணர்ந்து அனுஷ்டித்தால் விசேஷ பயன்களை அளிக்கும். வேதங்களுக்கு ஸாயனர் முதலிய மஹான்கள் பாஷ்யம் எழுதி வைத்திருக்கிறார்கள். அவைகளை படித்து புரிந்து கொள்வது ஸம்ஸ்கிருத பாஷையை நன்றாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கற்றுக் கொள்வதை ஆதாரமாகக் கொண்டது. அது எல்லோருக்கும் ஸாத்யமில்லை.

ஆகையால் எல்லோரும் எளிதாக வேதங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்களை தெரிந்துக் கொள்வதற்காக ஆஸ்திகரான ஸ்ரீ அ. சுப்பராமன் முதலாவதாக, கர்மாக்களை ப்ரதானமாகக் கொண்ட க்ருஷ்ண யஜுர் வேதத்தின் ஸாரத்தை சுருக்கமாக தமிழில் வெளியிட முன் வந்திருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

ஆஸ்திகர்கள் இந்நூலின் மூலம் கர்மாக்களிலுள்ள மந்திரங்களை அர்த்த ஸாரங்களுடன் அறிந்து நன்கு அனுஷ்டானம் செய்து கொண்டு இஹபர மேன்மைகளை அடையுமாறு ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயண ஸ்ம்ருதி:

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நன்றி !

இந்த வேத ஸாரத்தை தயாரிப்பதற்கு மிகவும் உதவியாக இருந்த ப்ரம்மஸ்ரீ T. K. ஜயராம தீக்ஷிதர் (Recipient of President award), அவர்களுக்கும், ப்ரஹ்மஸ்ரீ E. பாலசுப்ரமண்ய சாஸ்திரிகள் (Retd. Mimamsa professor, Sanskrit Collage, Madras) அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த க்ருதக்ஞ்யத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புத்தகத்தை அச்சிடுவதற்கு உதவிய Dr. ராஜம் அய்யர் டிரஸ்டுக்கும், ஸம்ஸ்கிருதத்திலும் வேதத்திலும் மிகவும் பற்றுள்ள நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

இந்த ப்ரசுரத்தில் சற்று உள்ளடக்கமாக அச்சடித்திருப்பது நம் நடைமுறையில் செயல்படுவதற்கு ஆதாரத்தை குறிக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முகவுரை

ப்ரம்மஸ்ரீ E. பாலசுப்ரமண்ய சாஸ்திரிகளின் உதவியால் தயாரிக்கப்பட்ட கிருஷ்ண யஜுர் வேத முதல் காண்டமும், ஆருவது காண்டமும் பார்த்து படித்ததில், இது மாதிரி தமிழில் அனு வாகம் அனுவாகமாக அதன் ஸாரத்தை எடுத்து உரைத்தது பாராட்டத்தக்கது. இப்பொழுதும் நடக்கும் நிலையில், அதாவது சமூகம் தன் குடும்பம், ஜீவனம் அதற்காகவே, அநேகமாக பகல் பூராவும் கழிக்கவேண்டியிருக்கிறது. இந்த மாதிரி ப்ரசுரம் ஆஸ்திகர்களுக்கு வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று அறிந்து முடிந்தவரை அதை பின்பற்றுவதற்கு உபயோக மாக இருக்கும். இதே மாதிரி வேதத்தின் பூரா பகுதியின் ஸாரத்தையும் ப்ரசுரிக்க என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

T. K. ஜெயராம தீக்ஷிதர்
20-1-93

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முன்னுரை

निष्कारणेन ब्राह्मणेन षडङ्गोवेदः अध्येयः ज्ञेयश्च என்று ஸ்ம்ருதி கூறுகிறது. இதன் பொருள் எவ்வித ப்ரயோஜனத்தையும் எதிர்பார்க்கமால் ஒவ்வொரு ப்ராம்மணனும் அங்கங்களோடு கூட வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். மேலும் அதன் பொருளையும் அறிந்து கொள்ளவேண்டும்.

தற்சமயம் வேதத்தை அத்யயனம் பூராவும் செய்வது அறிதாகிவிட்டது. இருந்தாலும் ஆங்காங்கு வேத பாடசாலைகளில் சிலர் அத்யயனம் செய்துவருகிறார்கள். ஆனால் அதன் பொருளை அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைப்பது அறிதாக ஆகிவிட்டது. வேத அத்யயனம் செய்தமாத்திரத்திலேயே ஸ்மார்த்த பிரயோகங்களில் அந்தந்த வேத பாகங்களை உபயோகித்து அனுஷ்டானம் செய்து வருகிறார்கள். ஆனால் அதனுடைய பொருளை அறிய முயற்சிப்பவர்கள் மிகவும் குறைவு. பெரும்பாலும் வேதத்தில் கூறப் படும் ச்ரௌத (யாகம்) கர்மாக்கள் ஆஹிதாக்னியால் (அக்னிஹோத்ரி) செய்யப்படவேண்டியதாகும். ஆகையால்தான் ஸ்மார்த்த ப்ரயோகத்தில் ஈடுபட்டவர்கள் வேதத்தின் பொருளை அறிவதற்கு பெரும்பாலும் கவனம் செலுத்துவதில்லை. கர்மானுஷ்டானம் செய்யும்போது எந்த வேத பாகம் உபயோகத்தில் வருகிறதோ அதனுடைய பொருளை அறிந்து மந்தரங்களை உச்சரிப்பதால் விசேஷ பலன் உண்டு என்று வேதத்திலேயே கூறப்படுகிறது. (यदेव विद्यया करोति तदेव वीर्यवत्तरं भवति)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பொதுவாக ஸந்தியாவந்தனம் போன்ற கர்மா னுஷ்டானங்களிலும் அதில் சம்பந்தப்பட்ட மந்த்ரங்களுடைய அர்த்தத்தை தெரிந்து செய் வது சிறந்ததாகும்.

வேதத்தின் பொருளை அறிய ஸாயனர் போன்ற மஹான்கள் பாஷ்யம் எழுதி இருக்கிறார் கள். அதைப் படித்து புரிந்து கொள்ளுவதற்கு ஸம்ஸ்க்ருத பாஷை நன்றாக கற்றிருக்க வேண்டும். அது எல்லோராலும் முடியாத காரியம். ஆகையினால் எல்லோரும் எளிதாக வேதத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களை தெரிந்து கொள்ளு வதற்காக க்ருஷ்ண யஜுர் வேதத்தின் ஸாரத்தை சுருக்கமாக அச்சிட்டு வெளியிட முயற்சி செய்யப் படுகிறது. இதனால் ஆஸ்திகர்கள் வேதத்தில் கூறப்பட்டுள்ள ஸாரத்தையாவது அறிந்து அவரவர்கள் அநுஷ்டானங்களை நன்கு அறிந்து செய்வார்கள் என்று நம்புகிறோம்.

நான்கு வேதங்களுள் கிருஷ்ண யஜுர் வேதத்தின் ஸாரம் சுருக்கமாக கூறப்படுகிறது. வேதத்தில் இருபாகங்கள் உள்ளன. ஒன்று மந்த்ர பாகம், இரண்டு, ப்ராஹ்மண பாகம். மந்த்ர பாகமானது அநுஷ்டானம் செய்யப்படுகிற கர்மா அதில் சம்பந்தப்பட்ட தேவதைகளின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது. ப்ராஹ்மண பாகமென் றால், விதி என்று சொல்லப்படுகிற கட்டளை வடிவமாகும். ஆங்காங்கு அந்தக் கட்டளையை

A

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நிறைவேற்றுவதற்காக விளம்பரத்தை போல் அர்த்தவாத பாகம் உள்ளது. அவைகளில் சிறுகதைகள் கூறப்பட்டுள்ளன. அதன் மூலம் சொல்லப்பட்ட விதி அவசியம் நிறைவேற்றப்பட வேண்டியது என்று விளக்கப்படுகிறது. பெரும் பாலான மந்த்ரங்கள் ச்ரௌத கர்மாவில் உபயோகப்படுவதால் அதை அநுஷ்டானம் செய் பவர்கள் அங்குள்ள மந்த்ரத்தை அர்த்தத்துடன் அனுஷ்டானம் செய்வதுதான் சிறந்தது. ஸ்மார்த்த கர்மாவை (விவாஹம், உபநயனம், ச்ராத்தம் முதலியவை) அனுஷ்டிப்பவர்கள் அந்த கர்மாவில் உபயோகப்படும் மந்த்ரத்தின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டால் போதும். ஆகையால் யாகங்களில் உபயோகப்படும் மந்த்ரங்களுக்கு அர்த்தம் சாதாரண ஆஸ்திகர் களுக்கு தேவைப்படாது என்று எண்ணி வேதத்தி லுள்ள எல்லா மந்த்ரங்களுக்கும் பொருள் எழுத வில்லை. ஆனால் வேதத்தில் என்ன (Contents) சொல்லியிருக்கிறது, என்ன செய்யவேண்டும், வேதத்தின் அடிப்படையில் உலகில் ஏற்பட்ட பழக்க வழக்கங்கள் யாவை என்பதை சுருக்கமாக விளக்குவதே இந்த ப்ரசுரத்தின் நோக்கம்.

ஆகையால் மந்த்ர பாகத்தில் சாதாரண ஆஸ்திகர்களுக்கு உபயோகப்படும் இடங்களில் அர்த்தமும், இதர இடங்களில் ஆங்காங்கு விதிக்கப்பட்ட கர்மானுஷ்டானங்களையும், அதை ஏன் செய்யவேண்டும், அதன் பயன் என்ன

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

I

என்பதையும், வேதத்தின் ஸாரத்தை சுருக்கமாக வெளியிடுகிறோம். वेदोऽखिलो धर्ममूलम् என்ற ஸ்ம்ருதி வசனப்படி ஆஸ்திகர்கள் கடைபிடிக்கும் பல தர்மங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் அடிப்படை, வேதம் தான் என்பதை ஆங்காங்கு சுட்டி காட்டுவதே இந்த ப்ரசுரத்தின் முக்கிய நோக்கம்.

க்ருஷ்ண யஜுர் வேதத்தில் ஸம்ஹிதா பாகம் 7 காண்டங்கள் (44 ப்ரச்னங்கள்) கொண்டது. அதே போல் ப்ராஹ்மணம் என்பது மூன்று அஷ்டகங்கள் (25 ப்ரச்னங்கள்) கொண்டது. அருணம், காடகம் 13 ப்ரச்னங்கள் உள்ளது. ஆக மொத்தம் 82 ப்ரச்னங்கள் உள்ளன. க்ருஷ்ண யஜுர் வேதத்தில் மந்திரமும் ப்ராஹ்ணமும் கலந்தே இருக்கும். ஆகையால் ஒவ்வொரு ப்ரச்னத்தினுடைய ஸாரத்தை எழுதும் போது மந்த்ரங்களின் உபயோகத்தை மாத்தரம் குறிப்பிட்டு, அது சம்பந்தப்பட்ட ப்ராஹ்மணம், விதி, பலன் எல்லாம் எந்த ப்ரச்சனத்தில் உள்ளதோ அங்கு விளக்கப்படும்.

க்ருஷ்ண யஜுர் வேதத்தில் முதல் காண்டத்தில்முதல் ப்ரச்னம் தர்சபூர்ணமாஸ இஷ்டி மந்த்ரங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் அதற்கு வேண்டிய ப்ராஹ்மணங்கள் மூன்ருவது அஷ்டகத்தில் இரண்டாவது மூன்ருவது ப்ரச்னங்களில் உள்ளன். முதல் ப்ரச்னத்தில் பொருள் கூறும் போது ப்ராஹ்மணத்தின் பொருள் கூறப்பட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மாட்டாது. அதை அஷ்டகத்தின் பொருள் எழுதும்போது காணவேண்டும். முதல் காண்டத்தில் 2, 3, 4வது ப்ரச்னங்களில் ஸோமயாகத்திற்கு வேண்டிய மந்த்ரங்கள் கூறப்பட்டுள்ளன. அதற்குறிய ப்ராஹ்மணம் வேது காண்டத்தில் உள்ளது. ஆகையால் முதல் காண்டத்திற்கு அடுத்து ஆருவது காண்டம் தனித்தனியாக ப்ரசுரிக்கப்படுகிறது.

தர்மத்திற்கு அடிப்படையான வேதத்தில் சொல்லப்பட்ட விஷயங்களை தொிந்துகொள்ளாத சாதாரன ஆஸ்திகர்களுக்கு ஒரு குறை இவ்வளவு நாளாக இருந்துவருகிறது. இந்த வெளியீட்டின் மூலம் ஆஸ்திகர்கள் அனைவரும் மேற்கண்ட குறையை நீக்கி தர்மத்தின் வேரான வேதத்தின் ஸாரத்தை உணர்ந்து, நீண்ட நாளாக இருந்த குறை நீங்கி நன்கு அனுஷ்டானம் செய்து, மிகுந்த பலனை அடைய உதவும் என்று நம்புகிறோம்.

இது முதல் ப்ரச்னமாக இருப்பதால் இதற்கு முன் இம்மாதிரி பதிப்புகள் சுருக்கமாக தமிழில் இல்லாததினால் ஏதாவது எழுதவேண்டியதை விட்டுவிடக்கூடும் அவைகளை பொருத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் இம்மாதிரி ப்ரசுரம் வெளிவருவதற்கு ஆஸ்திகர்கள் அனைவரும் ஊக்கமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

E. பாலசுப்ரமண்ய சாஸ்திரி (மீமாம்ஸா)
Retd. மைலாப்பூர் ஸம்ஸ்க்ருத கல்லூரி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ருஷ்ண யஜுர்வேத ஸாரம்

முன்னுரை

நாம் செய்யும் வைதிக கர்மாக்கள் இருவகைப்படும்.

1. ச்ரௌத கர்மா—வேதத்திற்கு ச்ருதி என்று பெயர் இருப்பதால் அதில் விதிக்கப்படும் கர்மாக்கள் ச்ரௌத கர்மா எனப்படுகின்றன.

2. ஸ்மார்த்த கர்மா—ஆபஸ்தம்பர், போதாயனர் போன்ற பல மஹரிஷிகள் இயற்றிய நூல்களுக்கு (ஸூத்ரங்கள்) ஸ்ம்ருதிகள் என்று பெயர். அந்த ஸ்ம்ருதிகளில் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ள கர்மாக்கள் ஸ்மார்த்த கர்மாக்கள் எனப்படும். ஸ்ம்ருதிகளுள் அந்தந்த ரிஷி தன்னை சேர்ந்தவர்களுக்கு என்று ஒரு பகுதியும் (க்ருஹ்ய ஸூத்ரம்) எல்லோருக்கும் பொதுவாக ஒரு பகுதியும் (தர்மஸூத்ரம்) எழுதியிருக்கிறார்கள். இவைகள் ஸ்மார்த்த கர்மாக்கள். அனுஷ்டானம் செய்யும் போது அனுஷ்டிப்பவர்களின் க்ருஹ்ய ஸூத்ரத்தில் சொல்லியபடி கர்மாக்களை சரியாக செய்யவேண்டும். அவைகளுக்கு விரோதமில்லாத காரியங்களை மற்ற ரிஷிகளுடைய ஸூத்ரங்களிலிருந்தும், தர்மசாஸ்திரங்களிடமிருந்தும் எடுத்துக் கொள்ளலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

40 ஸம்ஸ்காரங்கள்:—

ச்ரௌத கர்மாக்கள்—20

ஸம்ஸ்காரங்கள் உபநயனம், பஞ்சமஹாயக்யங்கள், ஏழு ஹவிர்யக்ஞங்கள், ஏழு ஸோம யாகங்கள்.

ஸ்மார்த்த கர்மாக்கள்—20

கர்பாதானம், பும்ஸுவனம், ஸீமந்தம், ஜாத கர்மா, நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், (ப்ராஜாபத்யம், ஸௌம்யம், ஆக்னேயம், வைச்வ தேவம் என்று) நான்கு காண்ட வ்ரதங்கள், ஸ்நாநகர்மா (ஸமாவர்தனம்—ப்ரம்மசரிய ஆச்ரமத்தை முடித்து கொள்ளுதல்), விவாஹம் ஏழு பாக யக்யங்கள்—மாசி ச்ராத்தம், அஷ்டகா ச்ராத்தம், ஸ்தாலீபாகம், ஸர்பபலி ஆரம்பம் (உபக்ரமம்) ஸர்ப பலி முடிவு (உத்ஸர்ஜனம்) ஆக்ரயன ஸ்தாலீபாகம், ஈசான பலி.

ஆபஸ்தம்ப தர்மஸூத்ரத்தில் உபநயனம் विद्यार्थस्य श्रुतितः संस्कारः (8வது ஸூத்ரம்) என்று, வித்யாப்யாஸம் செய்வதற்காக வேதத்தில் விதிக்கப்பட்ட ஸம்ஸ்காரம் உபநயனம் என்று கூறியுள்ளார். அதனால் வேதத்தில் விதிக்கப்பட்டதால் ச்ரௌத ஸம்ஸ்காரமாக கருதப்படுகிறது. பஞ்சாக்னி—கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி, ஆஹவனீயாக்னி, ஸப்யாக்னி, ஆவஸத்யாக்னி.

வேதத்தில் கூறப்பட்டுள்ள கர்மாக்கள் பெரும்பாலும் யாகங்கள் என்று சொல்லப்படு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கின்றன. அவைகள் நான்கு விதமானது. ஹோமங்கள், இஷ்டிகள், பசுயாகங்கள், ஸோம யாகங்கள் என்பது.

அக்னி ஹோத்ரம் முதலியன ஹோமங்கள்:— அதாவது வேதத்தில் ஜுஹோதி என்ற சொல் வருகிறதோ அங்கெல்லாம் ஹோமம் விதிக்கப்படு கிறது என்பது பொருள்.

இஷ்டிகள்:—யஜேத, யஜதி போன்ற பதங் கள் யாகத்தை விதிக்கின்றன. அந்த யாகம் இஷ்டியாகம், பசுயாகம், ஸோமயாகம் என்று மூன்று வகைப்படும். புரோடாசம், நெய், பால், தயிர் இது போன்ற த்ரவ்யங்களை விதிப்படி ஹவிஸ்ஸாக செய்து தேவதைகளுக்கு கொடுக்கக் கூடிய யாகத்திற்கு இஷ்டி என்று பெயர். வெள்ளாடு முதலிய வேதத்தில் குறிப்பிட்ட பசுக்களை யாகத்தில் ஹவிஸ்ஸாக கொடுப்பதற்கு பசு யாகம் எனப்படும்.

ஸோமலதையை கசக்கி ஜலத்தை விட்டு பிழிந்து அந்த ரஸத்தை தேவர்களுக்கு ஹவிர்பாக மாக கொடுப்பது ஸோம யாகம் எனப்படும்.

ஆஹிதாக்னி:—ஆதானம் என்று ஒரு கர்மா. உபநயனம் போல் வஸந்த காலத்தில் ப்ராம்ஹணன் செய்யவேண்டும் என்று விதிக்கப் பட்டிருக்கிறது. அந்த கர்மாவை அனுஷ்டித்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வுடன் ஆஹிதாக்னி என்ற பெயர் ஏற்படுகிறது. அன்று முதல் மூன்று அக்னிகளில் வேதங்களில் கூறப்பட்ட யாகங்களை செய்யவேண்டும். அந்த மூன்று அக்னிகளின் பெயர்கள் கார்ஹபத்யாக்னி, தக்ஷிணாக்னி, ஆஹவனீயாக்னி. கார்ஹபத்யாக்னி என்பது க்ரஹஸ்தனுக்கு ஔபாஸனாக்னி இருப்பது போல் நித்யமாகவே (24 மணி நேரமும்) அணையாமல் வைத்துக் கொள்ளவேண்டும். ஆஹவனீயாக்னியில்தான் ப்ரதான ஹோமங்கள் செய்யவேண்டும். தக்ஷிணாக்னியில் பிண்டபித்ரு யக்ஞம் செய்யவேண்டும். மற்றும் சில அங்க ஹோமங்கள் செய்யவேண்டும்.

ஒவ்வொரு ப்ரதமையிலும் செய்ய வேண்டிய இஷ்டிக்கு தக்ஷிணாக்னியில் அன்னத்தை பக்வம் செய்து நான்கு ரித்விக்குகளுக்கு அளிக்க வேண்டும். கார்ஹபத்யாக்னியில் சில அங்க ஹோமங்களும், பத்னியை ப்ரதானமாகக் கொண்டு செய்யவேண்டிய பத்னீ ஸம்யாஜம் போன்ற யாகங்கள் செய்யவேண்டும். இந்த மூன்று அக்னி களிலும் தினமும் காலையிலும், மாலையிலும் விதிக்கப்பட்டபடி செய்யும் ஹோமத்திற்கு அக்னி ஹோத்ரம் என்று பெயர். காலையில் செய்வதற்கு ப்ராதரக்னி ஹோத்ரம் என்றும், மாலையில் செய்வதற்கு ஸாயமக்னி ஹோத்ரம் என்றும் பெயர். தினமும் ஆஹிதாக்னிகள் உயிருள்ள வரை அக்னி ஹோத்ரம் செய்யவேண்டும். இந்த கர்மா வேதத்தில் கூறப்பட்டுள்ளதால் ஸ்ம்ருதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யில் சொல்லப்பட்ட பிறப்பு தீட்டு, இறப்பு தீட்டு, இவைகளால் பாதிக்கப்படுவதில்லை. ஆசௌச காலங்களிலும் அக்னி ஹோத்ர சமயத்தில் ஸ்நாநம் செய்வதால் அதை அனுஷ்டிக்கும் வரை சுத்தி ஏற்படுகிறது, என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது. ஆகையால் சிஷ்டர்கள் எக்காலத்திலும் விடாமல் அக்னி–ஹோத்ரம் செய்வார்கள்.

இஷ்டி:—நித்யம் அக்னி ஹோத்ரம் செய்து வருபவர்கள் ப்ரதமைதோரும் செய்ய வேண்டிய யாகத்திற்கு இஷ்டி என்று பெயர். இதே அடிப்படையில்தான் விவாஹம் முதல் எல்லா கிருஹஸ்தனும் தினமும் ஔபாஸனம் செய்து (வருபவர்) ஸ்தாலீபாகம் என்ற கர்மாவை செய்ய வேண்டும். இஷ்டியோ, ஸ்தாலீப்பாகமோ பத்னீ ரஜஸ்வலையாக இருந்தால் செய்ய முடியாது. அப்பொழுது அவளுக்கு சுத்தி வந்த பிறகுதான் செய்ய வேண்டும். இஷ்டிகளில் முதலாவதாக இருக்கும் இஷ்டிக்கு தர்சபூர்ணமாஸ இஷ்டி என்று பெயர்.

பசுயாகம்:—வருஷந்தோரும் அக்னி ஹோத்ரிகள் பசு (வெள்ளாடு) த்ரவ்யமாக உபயோகித்து செய்வது பசுயாகம். விதிப்படி பசுவினுடைய அங்கங்களை உபயோகப்படுத்தி செய்ய வேண்டியது. இதற்கு நிரூட பசுபந்தம் என்றும் பெயர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸோமயாகம்: — ஸோமயாகங்கள் பலவித மாக உள்ளன. அதில் நித்யமாக முதலில் செய்ய வேண்டியது அக்னிஷ்டோம ஸம்ஸ்தாக ஜோதிஷ்டோமம் என்பதாகும். இதை சுருக்கமாக அக்னிஷ்டோம ஸோமயாகட என்று கூறுவர். இது ஐந்து நாள் செய்யக்கூடிய யாகம். முதலில் தீக்ஷணீயேஷ்டி என்ற இஷ்டியை செய்து தீக்ஷை (யாகத்திற்கு உறிய போஜனாதி நியமங் கள்) ஏற்றுக் கொள்ளப்படுகிறது முதல் மூன்று நாள் விதிக்கப்பட்ட யாகங்கள் செய்யப்படு கின்றன. ஸோமலதை வாங்கப்படுகிறது. நான் காம் நாள் அக்னீஷோமிய பசுயாகம் என்ற ஒரு யாகம் செய்யப்படுகிறது. ஐந்தாம் நாள் காலை யில் ஒரு பசுயாகம் செய்யப்படுகிறது. பிறகு ப்ரதானமான ஸோம லதையை பிழிந்த ரஸத்தி னுல் விதிப்படி காலை, நடுப்பகல், மாலை, மூன்று வேளையிலும் ஹோமம் செய்யப்படுகின்றன. கடைசியில் அவப்ருத ஸ்நாநம் என்று குளத் திலோ, நதியிலோ விதிப்படி தீக்ஷித தம்பதிகள் ஸ்நானம் செய்வார்கள். அப்பொழுது அவர்களு டன் இருந்து மற்றவர்கள் யாகத்திற்கு தர்சிக்க வந்தவர்கள் ஸ்நாநம் செய்தால் விசேஷ புண்யம் உண்டு. பிறகு அதற்கு வேண்டிய அங்க இஷ்டிகள் செய்து யாகம் முடிவடையும்.

ஏழுவிதமான ஸோமயாகங்கள் நித்யமாக செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இஷ்டிகளுக்கு நான்கு பேர் ரித்விக்குகள்.

1. அத்வர்யு — யஜமானனுக்கு பதிலாக இஷ்டி முழுவதையும் நிர்வாகம் செய்பவர். இவர் சொல்படி மற்ற ரித்விக்குகள் தங்கள் காரியங்களில் ஈடுபடவேண்டும்.

2. ப்ரம்ஹா — யஜமானனுடன் கூடவே இருந்து இஷ்டிகளில் எந்த விதமான குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ப்ரோக்ஷணம் முதலிய சில கர்மாக்களில் ப்ரம்ஹாவினுடைய அனுமதி பெற்றுத்தான் அத்வர்யு காரியங்களை செய்ய வேண்டும். விதிகளுக்கு உட்பட்டுதான் பிரம்ஹா தன் இடத்தை விட்டு நகரமுடியும். நகருவதற்கு விதி இல்லாவிடில் ப்ரயோகத்தில் பெரும்பாலும் முடியும் வரை தன்னுடைய ஆசனத்திலேயே இருக்க வேண்டும். ப்ரம்ஹாவிற்கு உட்காரும் இடம் அக்னிக்கு தெற்கு பக்கம்.

3. ஹோதா—வேதிக்கு வடக்கு பக்கத்தில் உட்கார வேண்டும். அவர் ப்ரயோகம் ஆரம்பத்திலேயே அந்த ப்ரயோகம் சம்பந்தப்பட்ட தேவதைகளின் பெயர்களை குறிப்பிடுகிறார். யாக சம்பந்தப்பட்ட தேவதைகளை, ஹவிஸ் தயாரானவுடன் அத்வர்யு சொல்படி தேவதைகளை ஆஹ்வானம் செய்து ஹவிர்பாகத்தை கொடுக்கக் கூடிய யாஜ்யா மந்தரத்தைச் சொல்லி கடைசியில் "வௌஷட்" என்று சொல்லி மந்தரத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முடிக்க வேண்டும். "வௌஷட்" சொல்லும் போது அத்வர்யு ஹவிஸ்ஸை அக்னியில் ஸமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆக்னீத்ரன்—அத்வர்யுவினுடைய காரியங்களில் சிலவற்றில் இவர் செய்யும்படி ,அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

அவாந்தரதீக்ஷை—யஜமானன் மனஸ் ஸங்கல்பத்தின் மூலம் தன்னுடைய சரீரத்தை அக்னியினிடத்தில் ஒப்படைத்து, அக்னியின் சரீரத்தை தன்னிடம் இருப்பதாக பாவித்துக் கொண்டு சில வ்ரத நியமங்களை கடைப்பிடிப்பது அவாந்தர தீக்ஷை. தன்னுடைய சரீரத்தை அக்னியாக பாவித்ததால் விதிக்கப்பட்ட காரியங்களைத்தவிற மீதி சமயங்களில் குளிர்ந்த ஜலத்தை தொடக் கூடாது போன்ற நியமங்கள் இருக்கின்றன.

யூபம்—பில்வம், கருங்காலி, புரசை இவைகளுள் ஏதாவது ஒரு மரத்தை விதிமுறைப்படி வெட்டி, எடுத்து வந்து, எட்டு பட்டை தீட்டி, வழ வழப்பு செய்தல் போன்ற பல காரியங்களை விதிக்கப்பட்டபடி செய்யவேண்டும். அவ்வாறு ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட கட்டைக்கு தான் யூபம் என்று பெயர். இது யாகத்தில் அக்னியின் முன்புறத்தில் நடப்பட்டு பசுவை கட்டுவதற்கு உபயோகப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்தாலீ—சிறிய மண் குடுவை. பூதப்ருத் ஆதவணீயம் ஸோமலதை பிழிவதற்கு வேண்டிய ஜலம் நிரம்பிய மண் பானைகள்.

புரோடாசம்:—நெல் முதலிய தான்யத்தை குத்தி உமியை நீக்கி, பிறகு குருணையையும் நீக்கி, முழு அரிசியை அம்மியில் அறைத்து, மாவாக்கி, அந்த மாவை வருத்த பிறகு, வெண்ணீரை அந்த மாவில் விட்டு, மாவையையும், நெய்யையும் சேர்த்து, பிசைந்து, ஆமைவடிவத்தில் உருண்டையாக செய்து, கபாலங்களில் (கபாலம் ஒரு ரூபாய் வடிவமுள்ள ஓடு) நெருப்பை வைத்து, அதன் மேல் இந்த மாவு உருண்டையை எடுத்து வைத்து அதன் மேலும் தணலைப்போட்டு, சிறிய நேரம் காய்ச்சி, விதிவத்தாக மேலிலுள்ள சாம்பலை நீக்கி, மாவு உருண்டையை பித்தளை பாத்திரத்தில் (ஹவிஸ் பாத்திரத்தில்) நெய்யைத் தடவி வைக்க வேண்டும், இவ்வாறு தயாரிக்கப்பட்ட மாவு உருண்டைதான் புரோடாசம் எனப்படுகிறது.

வபை:—ஆட்டின் உணவு பெட்டகத்தை (குடல்) மூடுகின்ற, சுருங்கி, விரிவடையும் (Elastic) தன்மையுள்ள மெல்லிய துணி போன்ற உறுப்பு.

காம்யேஷ்டி:—ஐச்வர்யம், பசு, ஆரோக்யம் போன்ற பலவிதமான நமது இஷ்டங்களை அடைவதற்கு சாதகமான யாகங்கள் சுருக்கமாக ஒரு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பலனைக் கருதி செய்யப்படும் யாகங்கள் காம்யேஷ்டி யாகம்.

க்ரஹங்கள்:—உரல் போல் வடிவமுள்ள சிறிய மரப் பாத்திரம் க்ரஹம் எனப்படுகிறது.

சமஸம்:—சதுரமாக மரத்தினால் செய்யப் பட்ட பாத்திரம்.

புனராதானம் — அக்னிஹோத்ரம் அனுஷ் டித்து வருபவர் சில தவிர்க்க முடியாத காரணங் களால் அக்னிஹோத்ரம் தினம் செய்யாமல் விட்டு விட்டு மறுபடியும் அக்னி ஹோத்ரத்தை ஆரம்பிக்கும் போது செய்யவேண்டிய கர்மா விற்கு விச்சின்ன ஆதானம் என்று பெயர்.

சில சமயங்களில் வேதத்தில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக மறுபடியும் ஆதானம் செய்து கொள்வதற்கு புனராதானம் என்று பெயர்.

ஆஹிதாக்னியாக ஆவதற்கு செய்யப்படும் ஆதானத்தை போல் பெரும்பான்மை அங்கங்கள் இதற்கும் உண்டு. சிற்சில மாறுதல்களும் உண்டு.

பரிதி — இருசாண் அளவுள்ள சமித்து, அக்னிக்கு கிழக்கு பாகத்தை தவிர பாக்கி மூன்று திக்குகளிலும் ராக்ஷஸர்களை விலக்குவதற்காக போட வேண்டும். இதை ஸ்மார்த்தத்திலும் செய்கிறோம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுமந்தரணம்—அத்வர்யு ஹோமம் செய்யும் போது யஜமானன் अग्नय इदं न मम என்று சொல்ல வேண்டும். இதுபோல் அந்தந்த தேவதையின் பெயரை நான்காவது வேற்றுமையில் சொல்லி इदं न मम என்று சொல்ல வேண்டும். இதற்கு உத்தேச த்யாகம் என்று பெயர். உத்தேச த்யாகத்தை அனுசரித்து சொல்ல வேண்டிய மந்தரங்களுக்கு அனுமந்தரன மந்தரங்கள் என்று பெயர்.

இடா—ஹோமம் செய்து மீதி உள்ள ஹவிஸ்ஸுக்கு இடா என்று பெயர்.

ப்ரணீதா—உத்பவனம் என்ற ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட ஜலத்தை அக்னிக்கு இடது பக்கத்தில் தனியாக தர்பாஸனத்தில் ஒரு பாத்திரத்தில் வைக்க வேண்டும். அதற்கு ப்ரணீதா ஜலம் என்று பெயர். அதற்கு வருணன் தேவதை.

தேவதா பரிக்ரஹம்:—தேவதைகளை வரவழைத்து அடுத்தநாள் யாகத்திற்காக தன் வீட்டிலேயே தங்க வைத்துக் கொள்ளுதல்.

பரிஸ்தரனம்:—அக்னியை சுற்றி நான்கு பக்கத்திலும், பக்கத்திற்கு 16 தர்பை வீதம் ஒன்றுக்கொன்று தொட்டுக் கொண்டு இருக்கும்படி பரப்பவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதல் காண்டம் - முதல் ப்ரச்னம்

அனுவாகம்—1. (इषेत्वोर्जेत्वा)

கன்றுகுட்டியை விரட்ட புரசங்கிளை கொண்டுவந்து தாயிடமிருந்து கன்றை பிரித்து விட்டு, தாய் பசுக்களை, காட்டிற்கு மேய அனு புதல் - மறுநாள் இந்திரனுக்கு செய்யவேண்டி தயிர்யாகத்திற்கு தேவையான பால் ஸாய காலம் கறபதற்காக மேய்ச்சலுக்கு பசுக்க ஓட்டப்படுகின்றன.

அனுவாகம்—2. (यज्ञस्य घोषदसि)

தர்சபூர்ணமாஸ இஷ்டிக்கு தேவையா தர்பங்கள் முறைப்படி கொண்டு வருவதற் உரிய மந்திரங்கள்.

அனுவாகம்—3. (शुन्धध्वं दैव्याय)

இஷ்டிக்கு வேண்டிய பால், தயிர் பாத்திரங் களையும், மீதி கரவைக்கு தேவையான பாத்திரங் களையும் சுத்தப்படுத்தவேண்டிய மந்திரங்கள்.

பால் கறக்கிர பாத்திரம் இரும்பு பாத்திர மாக இருக்கக்கூடாது. மூடுவதற்கு மட்டும் இரும்போ, மரமோ வெங்கலமோ பாத்திரங் கள் வைத்துக்கொள்ளலாம். மூடி மேல், ஜலம் விடவும். வடிகட்டின பால் தான் உப

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யோகிக்க வேண்டும். கறந்த பாத்திரத்தில் கொஞ்சம் ஜலத்தைவிட்டு அலம்பின ஜலத்தை பாலில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்படி செய்வதால் பாலி னுடைய ருசியும் அதிகரிக்கிறது. மனித னுக்கு புஷ்டியையும் அதிகரிக்கிறது. வைதிக கர்மாக்களில் ராக்ஷஸர்களை விலக்குவதற் காக மூடியின் மேல் ஜலம் விடப்படுகிறது. உலக வழக்கிலும் ஈ எறும்புகள் வராத இருப் பதற்கு உபயோகப்படுகிறது.

தயிருக்காக பால் உறைகுத்துதல் —காய்ச்சின பாலை சிறிது நேரம் ஆர வைத்து தயிரை உறை குத்த வேண்டும். மோரைக்குத்தினால் தேவ காரியத்திற்கு உபயோகிக்க கூடாது.

காய்ச்சின பாலை சிறிது ஆறவைக்காமல் உறைகுத்தினால் ஆமிக்ஷை என்ற (கெட்டி தயிராக இல்லாமல் ஜலம் அடியிலும் மேல் வெண்ணை போல் கெட்டியான பாகம்), பொருள் உண்டாகிறது. இது குறிப்பிட்ட யாகத்திற்கு மட்டும் உபயோகப்படும்.

அனுவாகம்—4. (कर्मणे वां देवेभ्यः)

தேவதைக்கு வேண்டிய ஹவிஸ் தயா ரிப்பதற்கு நெல்வண்டியிலிருந்து நெல்லை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குறிப்பிட்ட தேவதை பெயர் சொல்லி நெல்லை தனியாக எடுத்துவைக்க மந்திரங் கள்.

‘‘धूरसि धूर्वं धूर्वन्तं...भ्रनेहृत्व्यं रक्षस्व’’ இஷ்டியில் ஹவிஸ் தயாரிப்பதற்கு வேண்டிய மந்தரங்கள். இப்பொழுது ஸ்மார்த்த ஸம்பரதாயப்படி ... என்ற சொல் தூபத்தில் உபயோகப் படுத்து கிறோம்.

கல்பத்தில் கூறியபடி, வண்டியிலிருந்து ஹவிஸ்ஸுக்கு வேண்டிய நெல்லை அளந்து தேவதைகளுக்கு எடுத்துக் கொண்டு விட்டு மீதியுள்ளதை தங்கள் உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளவும்.

அனுவாகம்—5 (देवोवस्सवितोत्पुनातु)

ஜலத்தை தர்பபவித்தரத்தினால் சுத்தம் செய்து அந்த ஜலத்தினால் ஹோமத்திற்கு சம்பந்தப்பட்ட பாத்ரங்களை ப்ரோக்ஷிக்க வேண்டும்.

இந்த அடிப்படையில்தான் ஸ்மார்தத்தி லும் மந்தரமில்லாமல் ப்ரோக்ஷணீ பாத்திரத் தில் தர்பபவித்ரத்தையும் அக்ஷதையும் வைத் துக்கொண்டு அதில் தீர்த்தத்தைவிட்டு பவித் ரத்தினால் ஜலத்தை மேற்கிலிருந்து கிழக்காக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூன்று தடவை இழுத்து, அதனால் சுத்தப் படுத்தப்பட்ட ஜலத்தினால் ஹோமத்திற்கு உபயோகப்பட கூடிய ஆஜ்யபாத்ரம், புரசு இலை, ஸமித் போன்ற அந்த கர்மாவுக்கு தேவையான பொருள்களை ப்ரோக்ஷித்து சுத்தம் செய்கிறோம்.

(கீழ்கண்டது ப்ராம்மணத்தில் கூறப்படுகிறது)

இந்திரன் வ்ருத்ராசூரனை கொன்றார். அவன் ஜலத்தை நோக்கி விழுந்து இறந்தான். ஆகையால் ஜலத்தினுடைய ஸாரம் வெளியேறியது. அந்த ஸாரம் தேவ ஸம்பந்தப்பட்டது, மனுஷ்ய ஸம்பந்தப்பட்டது என்று இருவகைப்படும். அசுத்தத்தை அலம்புவதற்கு உபயோகப்படும் தண்ணீர் மனுஷ்ய ஸம்பந்தப்பட்டதாகும். தேவ ஸம்பந்தப் பட்ட ஸாரம்

இருவகை 1. ஸ்நாநம் முதலியதன் மூலம் பாபத்தை போக்க வல்லது. 2. ப்ரோக்ஷணம் செய்வதால் தேவ காரியங்களில் சம்பந்தப் பட்ட பொருள்களை சுத்தப்படுத்தக் கூடியது. இந்த ஜலத்தின் ஸாரமே தர்ப்பமாக முளைத்தது.

ஆகையால் இரண்டு தர்பங்களால் சுத்தம் செய்ய வேண்டும். இந்திரன் வ்ருத்ராசூரனிடம் பயந்து ப்ரஹ்மாவிடம் சென்றார். ப்ரஹ்மா வஜ்ராயு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தத்தை ஜலத்தில் நனைத்துக் கொடுத்தார். அதனால்தான் வ்ருத்ராஸூரனைக் கொல்ல முடிந்தது. இதிலிருந்து ஜலத்தினுடைய பெருமை தெரிகிறது.

உரலை வைத்து, அதில் நெல்லைப் போட்டு, உலக்கையால் குத்தி, அரிசி தயாரிக்கும் மந்தரங்கள் சொல்லப்படுகின்றன.

ஸ்மார்த்தத்தில் மந்தரங்கள் இல்லாமல் உரலில் குத்திய அரிசியைத்தான் ஸ்தாலீ பாகத்தில் உபயோகப் படுத்த வேண்டும். என்பது இதன் அடிப்படையில் தான் ஸூத்ர காரர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

உமியை முறத்தினால் புடைத்து கீழே போட வேண்டும். அது ராக்ஷஸர்களைச் சேர்ந்தது. எல்லா தேவ காரியத்திற்கும் மூங்கிலால் செய்யப்பட்ட முறமோ, கூடையோ போன்ற சாமான்களை உபயோகப்படுத்த வேண்டும்.

அனுவாகம்—6. (अवधूतँ रक्षः)

கீழே மான் தோலை விரித்து, அதன் மேல் அம்மியை வைத்து, அரிசியைப் போட்டுக் குழவியினால் மந்தரத்துடன் மாவாக்க வேண்டியது.

அனுவாகம்—7. (धृष्टिरसि ब्रह्म)

இஷ்டிக்கு தேவையான புரோடாசத்தை கபாலங்களில் அக்னியை வைத்து காய வைக்கும்படி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய கபாலங்களை மந்தரங்கள் சொல்லி அடுக்க வேண்டியது.

அனுவாகம்—8. (संवपामि समापः)

புரோடாசம் மந்தரத்தோடு தயாரிக்கும் முறை சொல்லப்பட்டு இருக்கிறது. ஹவிஸ் தயாரிப்பதற்கு நெல்லைக் குத்திப் புடைத்து செய்யக்கூடிய காரியங்களால் நெல்விதையை முளைக்கக் கூடிய தகுதி உள்ளதை அரிசியாக ஆக்கியதின் மூலம் ஏற்படும் பாபத்தை அகற்றுவதற்காக தேவதைகள் எல்லோரும் சேர்ந்து அக்னியின் மூலம் ஜலத்தின் உதவியினுல் ஏகதன், த்விதன், த்ரிதன் என்று மூவர்களை உற்பத்தி செய்து அவர்களிடம் இந்த பாபத்தை கொடுத்தனர். இந்த பாபமானது அவர்களிடமே இல்லாமல்

தொடர்ந்து வரிசையாக சூரியோதயத்தில் தூங்குபவன், அஸ்தமனத்தில் தூங்குபவன், சொத்தை நகம் உள்ளவன், சொத்தைப் பல்லன், கல்யாணம் ஆகாத தமக்கை இருக்கும் பொழுது தங்கையை விவாகம் செய்து கொடுத்தவன், தம்பி விவாகம் செய்து கொண்ட பிறகும் விவாகத்திற்கு தகுதி இருந்தும் விவாகம் செய்து கொள்ளாத தமையன், க்ஷத்திரியனை கொன்றவன், ப்ராஹ்மணனை (ஹிம்ஸிக்கிறவன்) கொன்ற

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வன் இவர்களிடத்தில் மேற்படி பாபம் முறை யாக போய் சேறுகிறது. கடைசியாக ப்ரஹ்மஹத்தி பாபம் செய்தவனிடம் நிலே யாக இந்த பாபம் தங்கி விடுகிறது. அவனே விட்டு அகலுவதில்லே

என்று இந்த அனுவாக சம்பந்தப்பட்ட ப்ராஹ்மண பாகத்தில் மூன்றும் அஷ்டகம் இரண் டாம் ப்ரச்னம் எட்டாவது அநுவாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து தெரிவது என்னவெனில் மேலே குறிப்பிட்ட சூரிய உதயாஸ்தமனத் தில் தூங்குவது போன்ற பாபங்களே செய்யக் கூடாது என்பதாகும்.

அனுவாகம்—9. (आदद इन्द्रस्य)

மந்தர பூர்வமாக இஷ்டிக்கு வேண்டிய வேதி தயாரிப்பது சொல்லப்பட்டிருக்கிறது. வேதி தயாரிக்கும் பொழுது கிழக்கேயும், வடக்கேயும் தாழ்வாக இருக்கும்படி அமைக்க வேண்டும். இதன்

அடிப்படையில் தான் அக்னி வைப்பதற்கு இடத்தை சுத்தி செய்யும் பொழுது தர்பை யினுல் கோடுகளே வடக்கில் முடிவதாகவும், கிழக்கே முடிவதாகவும் ஸ்மார்த்த ப்ரயோகத் தில் கூறப்பட்டுள்ளது.

(ப்ராஹ்மணம் மூன்றும் அஷ்டகம் இரண்டாம் ப்ரச்னம் மூன்றுவது அனுவாகம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—10. (प्रत्युष्टँ रक्षः प्रत्युष्टाः)

இஷ்டிக்கு சாதகமான ஹோமபாத்திரங்களைச் சுத்தம் செய்து நெய்யை எடுத்துக்கொள்வதற்கு உண்டான மந்திரங்கள்.

அனுவாகம்—11. (कृष्णोऽस्याखरेष्ठोऽग्नये)

இத்மம், தர்பம் இவைகளை கொண்டுவந்து வேதியில் வைத்து அதில் ஹவிஸ்ஸை வைக்க வேண்டிய மந்திரங்கள்.

பரிதி போடவேண்டிய முறை கூறப்படுகிறது.

கிழக்கு திக்கை நீக்கி, மற்ற திக்குகளில் பரிதி (இருசாண் அளவுள்ள சமித்) வைக்க வேண்டும் என்றும், கிழக்கு பக்கத்தில் ஸமித் அவசியமில்லை ஏனென்றால் சூரியனே அந்த திக்கை ராக்ஷஸர்களிடமிருந்து காப்பற்றுகிறார்.

அனுவாகம்—12. (भुवनमसि विप्रथस्वाग्ने)

இதில் ஆகார கர்மாவை அனுஷ்டிக்கும் முறை சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகாரம் என்பது வடமேற்கு மூலையிலிருந்து தென் கிழக்கு மூலை வரை நெய்யை தாரையாக இடைவெளி இல்லாமல் விடவேண்டியது. மறுபடியும் தென் மேற்கிலிருந்து வட கிழக்கு வரையிலும் நெய்யை தாரையாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விடவேண்டும். இவைகளை மந்தரமில்லாமல் ஸ்மார்த்த காரியங்களில் ஆகாரம் அநுஷ்டிக்கப்படுகிறது.

அனுவாகம்—13. (वाजस्यमा)

இந்த அனுவாகத்தில் பரிதி, பாத்திர ஸாதன தர்பங்கள் முதலியவைகளைத் துடைத்து அக்னியில் போடும் முறை மந்தரத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அடிப்படையில் ஸ்மார்த்த ப்ரயோகத்திலும் பாத்திர ஸாதன தர்பங்களை தெற்கு கோடியில் பெரிய இலையையும் (ப்ரதான தர்வி) நடுவில் சிறிய இலையையும் (இதர தர்வி) வடக்கில் நெய் பாத்ரத்தையும் வைத்து தர்பங்களின் நுனியால் பெரிய இலையையும் நடுவில் சிறிய இலையையும் தர்பையின் அடி பாகத்தால் நெய் பாத்திரத்தையும் நனைக்கப்படுகிறது. பூர்ணாஹுதியும் சொல்லப்பட்டிருக்கிறது.

அனுவாகம்—14. (उभावामिन्द्राग्नी आहुवध्या)

காம்யேஷ்டிக்கு வேண்டிய புரோனுவாக்யை, யாஜ்யை என்ற மந்தரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது தேவதைகளை அழைத்து ஹவிர்பாகம் கொடுப்பதுதான் இதன் பொருள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதல் காண்டம் இரண்டாம் ப்ரச்னம்

ஸோமயாக விவரம்

அனுவாகம்—1. (आप उन्दन्तु जीवसे)

ஸோம யாகத்தில் வபனம் முதலிய தீக்ஷா தர்மங்களுக்கு வேண்டிய மந்தரங்கள் சொல்லப் பட்டிருக்கிறது.

அனுவாகம்—2. (आकूत्यै प्रयुजेऽग्नये)

தீக்ஷணீய இஷ்டிக்கு வேண்டிய விசேஷ ஹோமங்களையும் மேகலை, அஜினம் முதலியவை களை ஸ்வீகரித்துக் கொள்ளவேண்டிய மந்தரங் கள் கூறப்படுகின்றன.

அனுவாகம்—3. (दैवीं धियं मनामहे)

யாக சாலைக்கு சென்று அக்னி ஹோத்ர ஸ்தானத்தில் பாலை அக்னிக்கு பதிலாக யஜமானனே சாப்பிடவேண்டும். அக்னி ப்ரார்த்தனை, யாகத்திற்கு வேண்டிய த்ரவ்யங் களை மந்த்ர பூர்வமாக யாசித்து பெற்றுக் கொள் ளுதல் முதலியன கூறப்பட்டுள்ளன.

அனுவாகம்—4. (इयं ते शुक्र)

ஸோமலதையை வாங்கும் முறையைக் கூறு கிறது. வாங்கும் முறையில் चिदसि मनासि, धीरसि என்ற மந்தரத்தின் பொருள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உடல் உருப்புகளுக்கு உணர்ச்சியே சித்தம் என்பதாகும். மனது என்பது ஒரு வஸ்துவினுடைய தன்மையை ஆராயும் ஸ்வபாவம் உள்ளது. தீர்மானமான முடிவு எடுக்கும் ஸ்வபாவம் என்பது புத்தி (धीः)

அனுவாகம்—5. (वस्व्यसि रुद्राऽसि)

ஸோமலதையை வாங்க வந்த மாட்டை திருப்பி அனுப்பும் போது செய்யவேண்டிய சில ஹோமங்கள் முதலியவை சொல்லப்படுகின்றன.

அனுவாகம்—6. (अꣳशुना ते)

ஸோமலதையின் விலை மதிப்படப்படுகிறது.

அனுவாகம்—7. (सोमन्ते क्रीणामि)

ஸோமலதையை மந்தர பூர்வமாக வாங்கும் முறை, வாங்கி அதைப் பாதுகாக்கும்படி தேவதைகளிடம் ப்ரார்த்தனை முதலியவை சொல்லப்படுகின்றன.

அனுவாகம்—8. (उदायुषा स्वायुषा)

வாங்கிய ஸோமலதையை வஸ்திரத்தில் மூட்டை கட்டி, வண்டியில் ஏற்றி வைக்கும் முறை கூறப்படுகிறது.

அனுவாகம்—9. (प्रच्यवस्व भुवस्पते)

வண்டியில் ஏற்றிய ஸோமலதையை ஆஹவணீய அக்னி ஸமீபத்தில் கொண்டு வந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வைக்க வேண்டிய முறை மந்தர பூர்வமாக கூறப்படுகிறது.

அனுவாகம்—*10.* (अग्नेरादित्यमसि)

ஆதித்யேஷ்டி கூறப்படுகிறது (விருந்தாளியை உபசரிக்கும் முறை).

அனுவாகம்—*11.* (अँशुरँशुस्ते)

ராக்ஷஸர்களிடமிருந்து ஸோமலதையைக் காப்பாற்றுவதற்கும் வாடாமல் இருப்பதற்கும் வேண்டிய மந்தரங்களையும் "உபஸத்" போன்ற காரியங்களையும் கூறுகிறது.

அனுவாகம்—*12.* (वित्तायनीमेऽसि)

உத்தர வேதி எனப்படுகிற ஆஹவனீயாக்னி வைக்கும் இடம் தயாரிக்கும் முறை கூறப்படுகிறது.

அனுவாகம்—*13.* (युञ्जते मन उत)

ஹவிஸ்ஸை தயாரித்து வைக்க வேண்டிய ஹவிர்தான் மண்டபம் தயாரிக்கும் முறை கூறப்படுகிறது.

அனுவாகம்—*14.* (कृणुष्वपाजः)

ரக்ஷோக்ன இஷ்டிக்கு தேவையான "ஸாமிதேனி" மந்தரங்களும் யாஜ்யா புரோனுவாக்யைகள் சொல்லப்படுகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதல் காண்டம்-மூன்றும் ப்ரச்னம்

அனுவாகம்—1. (देवस्यत्वा सवितुः)

ஸ்தோத்ரம், சஸ்த்ரம் இவைகளை சொல்லுவதற்காக ரித்விக்குகள் உட்கார வேண்டிய இடத்திற்கு ஸதஸ் என்று பெயர். அதைத் தயாரிக்கும் முறையைக் கூறுகிறது.

அனுவாகம்—2. (रक्षोहणो वलगहनः)

ஹவிர்தான மண்டபத்தில் ஸோமலதையை வைக்குமிடத்தில் ராக்ஷஸர்கள் இருந்தால் அவர்களை விலகச் செய்து சுத்தமாக்குவதற்காக நான்கு குழிகள் தோண்டவேண்டும். இந்த குழிகளுக்கு உபரவம் என்று பெயர். அதை தயாரிக்கும் முறை ஸோமலதையை பிழிவதற்காக உள்ள பலகை, மான்தோல் முதலியவைகளை வைக்க வேண்டிய மந்தரங்கள்.

அனுவாகம்—3. (विभूरसि प्रवाहणः)

ஹோதாவின் கணத்திலுள்ள ரித்விக்களுக்கு முன்புறம் அக்னி வைப்பதற்காக மேடை தயாரிக்க வேண்டிய மந்தரங்கள்.

அனுவாகம்—4. (त्वँसोम तनूकृद्भ्यः)

வைஸர்ஜன ஹோம மந்தரங்கள் அவாந்தர தீக்ஷையின் முடிவையும் கூறுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—5. (अत्यन्यानगान्)

பசுயாகத்திற்கு வேண்டிய யூபம், பசு கட்டுவதற்காக மரம் வெட்டும் முறை சம்பந்தப் ப்ட்ட மந்தரங்கள்.

அனுவாகம்—6. (पृथिव्यैत्वा अन्तरिक्षायत्वा)

வெட்டின மரத்தைக் கொண்டு வந்து யாக சாலையில் ப்ரதிஷ்டை செய்ய வேண்டிய மந்தரங்கள்.

அனுவாகம்—7. (इषेत्वोपवीरस्युपो)

யூபத்தில் பசுவைக் கட்டுவதற்கு முன் பசு விற்கு செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்கள்.

அனுவாகம்—8. (आददऋतस्यत्वा)

பசுவின் வபைக்காக உயிர் பிரிவதற்கு வேண்டிய காரியங்களை கூறுகிறது.

அனுவாகம்—9. (वाक्त आप्यायतां)

பசுவின் வபையை எடுத்து அக்னியில் பாகம் பண்ணும் விதிமுறைகள்.

அனுவாகம்—10. (सन्ते मनसा)

வஸா (ரத்தத்தின் மேல் பாகமான ஊந்தண் (ஜலபாகம்) ஹோமம் செய்யும் முறை, ஹோம மந்திரங்கள் முதலியன கூறப்பட்டு இருக் கின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—*11.* (समुद्रंगच्छस्वाहा)

பசுயாக அங்கமான "உபயத்" என்ற ஹோம மந்தரங்கள்

அனுவாகம்—*12.* (हविष्मतीरिमा आपः)

ஸோமலதையைப் பிழிவதற்கு உபயோகிக்கின்ற "வஸதீவரீ" என்ற ஜலத்தைக் கொண்டு வரவேண்டிய மந்தரங்கள்.

அனுவாகம்—*13.* (हृदेत्वामनसेत्वा)

ஸோமலதையை வண்டியிலிருந்து இறக்குவதற்கு மந்தரங்கள்.

அனுவாகம்—*14.* (त्वमग्ने रुद्रो असुरः)

காமயேஷ்டிகளுக்கு தேவையான ப்ரோனுவாக்யா மந்தரங்கள், யாஜ்யா மந்தரங்கள்.

முதல் காண்டம் நான்காவது ப்ரச்னம்

ஸோமலதையை பிழிந்து க்ரஹம், சமஸம் என்ற பாத்திரங்களில் எடுத்து வைக்கும் மந்தரங்கள், தக்ஷிணை கொடுக்கும் முறை, ஸமிஷ்டயஜுர் ஹோம மந்தரங்கள் அவ்ப்ரதத்திற்கு வேண்டிய மந்தரங்களும் அடங்கியுள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—1. (आददे ग्रावासि)

ஸோமலதையைப் பிழியும் முறையை வர்ணிக்கிறது.

அனுவாகம்—2. (वाचस्पतये पवस्व)

உபாம்சு க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து ஹவிஸ் வைக்கவேண்டிய மேடையில் வைப்பதற்கு வேண்டிய மந்தரங்கள்.

அனுவாகம்—3. (उपयामगृहीतोसि अन्तर्यच्छ)

அந்தர்யாம க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்கவேண்டிய மந்தரம். அபிமான தேவதை அபானன்.

அனுவாகம்—4. (आवायो भूष शुचिपाः)

ஐந்திரவாயவ க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்கவேண்டிய மந்தரம். அபிமான தேவதைகள் = இந்திரன், வாயு.

அனுவாகம்—5. (अयं वां मित्रावरुणा)

மைத்ராவருண க்ரஹத்தில் ஸோமரஸத்தைப் பாலோடு சேர்த்து வைக்க வேண்டிய மந்தரம். அபிமான தேவதைகள் = மித்ரன், வருணன்.

அனுவாகம்—6, 7. (या वां कशा) (प्रातर्युजौ)

அச்வினி தேவர்களுக்கு ஆச்வின க்ரஹத்தில் எடுத்து வைக்க வேண்டிய மந்தரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—8. (अयंवेनश्चोदयत्)

சுக்ரக்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க மந்தரம். அபிமான தேவதை-சண்டன்

அனுவாகம்—9. (तं प्रत्नथा पूर्वथा)

மந்தி க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க மந்தரம் அபிமான தேவதை-மர்கன்.

அனுவாகம்—10. (येदेवा दिव्येकादशस्थ)

ஆக்ரயண க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க மந்தரம். அபிமான தேவதைகள்-விச்வேதேவர்கள்.

அனுவாகம்—11. (त्रिꣳशत्त्रयश्च गणिनः)

சத்ருபாதை இருந்தால் போக்கடிப்பதற்காக ये देवा என்ற மந்தரத்திற்கு பதிலாக त्रिꣳशत् त्रयश्च மந்தரத்தை சொல்லி ஸோமரஸத்தை எடுத்து வைக்கவேண்டும் தேவதைகள்-விச்வே தேவர்கள் தான்.

அனுவாகம்—12. (उपयामगृहीतोऽसि इन्द्राय त्वा)

உக்த்ய க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்கவேண்டிய மந்தரம். தேவதை-இந்திரன்

அனுவாகம்—13. (मूर्धानं दिवो अरतिं)

துருவம் என்கிற பாத்திரத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க மந்திரம். வைச்வானர அக்னி தேவதை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—*14.* (मधूश्चमाधवश्च)

ருதுக் க்ரஹங்களில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க மந்தரம். அம்பஸ்பதி தேவதை.

அனுவாகம்—*15.* (इन्द्राग्नी आगतं)

ஐந்திராக்ன க்ரஹத்தில் ஸோம ரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரம் - இந்திராக்னி தேவதை.

அனுவாகம்—*16.* (ओमासश्चर्षणीधृतः)

விச்வே தேவர்களுக்கு ஸோம ரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரம். விச்வே தேவர்கள் தேவதைகள்.

அனுவாகம்—*17, 18, 19.* (मरुत्वन्तं वृषभं) (इन्द्रमरुत्व इहपाहि) (मरुत्वाँ इन्द्रवृषभः)

மருத் கணங்களோடு கூடிய இந்திரனுக்காக ஸோமரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரங்கள். மருத் கணங்களோடு கூடிய இந்திரன் தேவதை.

அனுவாகம்—*20, 21.* (महाँ इन्द्रो य ओजसा) (महाँ इन्द्रा नृवदाचर्षणिप्रा)

மாஹேந்தர க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க மந்தரம் - மஹேந்தரன் தேவதை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—22. (कदाचनस्तरीरसि)

ஆதித்ய பாத்திரத்திஞல் ஸோமரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரங்கள் - ஆதித்யன் தேவதை.

அனுவாகம்—23, 24, 25 (वाममद्य सवितः) (अदब्धेभिस्सवितः) हिरण्यपाणिमूतये

ஸாவித்ரக்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரம் - ஸவிதா தேவதை 24வது 25வது அன்வாகங்களில் சொல்லப்பட்ட மந்தரங்கள் ஏதாவது ஒரு அன்வாக மந்தரத்தை சொல்லி ஸோமரஸத்தை எடுத்து வைக்கவும் - ஸவிதா தேவதை.

அனுவாகம்—26. (सुशर्मासि सुप्रतिष्ठानः)

வைச்வதேவ க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரம் - விச்வே தேவர்கள் தேவதை.

அனுவாகம்—27. (बृहस्पति सुतस्यत इन्दो)

பாத்னீவத க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரம் தேவதை த்வஷ்டாவுடன் கூடிய பத்னீவான்.

அனுவாகம்—28. (हरिरसि हारियोजनः)

ஹாரியோஜன க்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரம் - இந்திரன் தேவதை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—29, 30, 31. (अग्न आयूँषि पवस) (उत्ति-ष्ठन्नोजसा) (तरणिर्विश्वदर्शतः)

முதல் அதிக்ராஹ்ய க்ரஹங்களில் ஸோம ரஸத்தை எடுத்து வைக்க வேண்டிய மந்தரங்கள். 29க்கு அக்னி, 30க்கு இத்திரன் 31க்கு சூரியன்.

அனுவாகம்—32. (आप्यायस्व मदिन्तम)

ஸோம ப்ரார்த்தனே.

அனுவாகம்—33. (ईयुष्टेये)

உஷஸ் தேவதையின் ப்ரஸாதம் அடைதல்.

அனுவாகம்—34. (ज्योतिष्मतीन्त्वा सादयामि)

பலவிதமான ஜ்வாலேகளின் மீது ஸமித்தை வைப்பது சொல்லப்படுகிறது.

அனுவாகம்—35. (प्रयासाय स्वाहा)

ப்ரயாஸன முதலிய தேவதைகளுக்கு செய்ய வேண்டிய ஹோம மந்த்ரங்கள்.

அனுவாகம்—36. (चित्तँ सन्तानेन)

ர ா ஜ ஸி ஹ வி ஸ் ை ஸ ஹோமம் செய்ய வேண்டிய மந்தரம்.

அனுவாகம்—37 முதல் 42 வரை (आतिष्ठ वृत्रहन्) (इन्द्र-मिद्धरी (असावि सोम) (सर्वस्य प्रतिशीवरी) (महाँ इन्द्रो वज्रबाहुः) (सजोषा इन्द्र)

ஷோடசிக்ரஹத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைப்பதற்கு உள்ள மந்தரம். இந்திரன் தேவதை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—43. (उदुत्यं जातवेदसं)

ஸோமயாகத்தில் தக்ஷிணையை மந்தர பூர்வமாக ஹோமங்களுடன் கொடுக்கும் முறையை கூறுகிறது.

அனுவாகம்—44. (घातारातिः)

ஸமிஷ்டயஜுர்ஹோம மந்தரங்கள்.

அனுவாகம்—45. (उरुँहिराजा)

அவப்ருத இஷ்டிக்கு ஸம்பந்தப்பட்ட மந்தரங்கள்.

அனுகவாம்—46. (वस्स्वाहुवाकीरिणा)

காம்யேஷ்டிக்கு வேண்டிய யாஜ்யா மந்தரங்களும் புரோனுவாக்யா மந்தரங்களும் அடங்கியது

முதல் காண்டம் 5-ம் ப்ரச்னம்

அனுவாகம்—1. (देवासुरास्सय्यत्ता आसन्)

புனராதானத்தைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. புனராதானத்திற்கு தேவதையான அக்னியைப் பற்றி சொல்லுவதற்காக சிறு கதையை உதாரணமாகச் சொல்லி அதன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தொடர்ச்சியில் யாகத்தில் வெள்ளியை தக்ஷிணை யாக கொடுக்கக்கூடாது என்பதற்கு காரணம் விளக்கம், இவை கூறப்பட்டுள்ளது.

தேவர்களும் அசுரர்களும் சண்டையில் ஈடுப்பட்டனர். தேவர்கள் வெற்றியை அடைந் தனர். அப்பொழுது தேவர்கள் அசுரர்களிட மிருந்து கிடைத்த ரத்னம் போன்ற சிறந்த செல்வங்களை ரக்ஷிப்பதற்காக அக்னியினிடத்தில் கொடுத்து வைத்தார்கள். ஒரு சமயம் அசுரர்கள் ஜெயித்தால் இந்த தனம் ஆபத் காலத்தில் உதவும் என்று நினைத்தார்கள். ஆனால் அக்னி யானவர் அந்த தனத்தை விரும்பினர். பிறகு தனத்தோடு ஓடிவிட்டார். தேவர்கள் புண்ய பலத்தினால் அசுரர்களை ஜெயித்தனர். பிறகு தனத்தை அடைய விரும்பி அக்னியைப் பின் தொடர்ந்து, பலாத்காரமாக அந்த தனத்தைத் திரும்பி அடைய விரும்பினர். தனம் கைவிட்டு போகிறதனால் அக்னி அழுதார். அவ்வாறு அழுவதினால்தான் ருத்ரருக்கும் ருத்ரன் என்று பெயர் வந்தது. இவ்வாறு அக்னியின் கண் களிலிருந்து வெளிவந்து பூமியில் விழுந்த அந்த கண்ணீர் வெள்ளியாக ஆயிற்று. வெள்ளி கண்ணீரிலிருந்து உண்டானதினால் யாகத்தில் தக்ஷிணையாக கொடுப்பதற்கு தகுதியற்றது. ஆகையால் யாகத்தில் அதை தானம் செய்தால் அந்த வீட்டில் ஒரு வருஷத்திற்குள் அழ-

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நேரிடும். ஆகையால் யக்ஞத்தில் வெள்ளியை கொடுக்கக்கூடாது.

அனுவாகம்—2. (परावा एषयज्ञं)

புனராதானம் செய்யும் முறைகளும், அதற்கு வேண்டிய மந்தரங்களும் கூறப்பட்டு இருக்கின்றன. செல்வத்தை அடைவதற்காக செய்யக் கூடிய புனராதானத்தில் பிரயாஜ யாகங்களை தாழ்ந்த குரலில் மந்திரங்களை உச்சரிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. வேதமே அதற்கு உதாரணமாக, எவ்வாறு புதையல் கிடைத்தால் ரகசியமாக பேசுவானோ, அவ்வாறு மெதுவாக சொல்லவேண்டும். ஸ்விஷ்டக்ருத் யாகத்தின் மந்தரங்களை உரக்கச் சொல்லி செய்யவேண்டும். இதற்கு உதாரணமாக ஒருவனுக்கு நஷ்டமான பொருள் கிடைத்தவுடன் சந்தோஷத்தினால் எப்படி உறத்த குரலில் சந்தோஷத்தை தெரிவிக்கிறானோ. அதுபோல் இதை உரத்த குரலில் மந்தரங்களைச் சொல்லிச் செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் தான் ஸ்மார்த்தத்திலும் ஸ்விஷ்டக்ருத் ஹோமம் உறக்கச் சொல்லி செய்யப் படுகிறது.

அனுவாகம்—3. (भूमिर्भूम्ना)

கார்ஹபத்யம் முதலிய ஐந்து அக்னிகளை அந்தந்த இடத்தில் வைப்பதற்கு உள்ள மந்தரங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—4. भूमिर्भूम्ना द्यौर्वरिणेत्याह)

भूमिर्भूम्ना என்ற மந்தரத்தை சொல்லி கார்ஹ பத்யாக்னியை அதனுடைய ஸ்தானத்தில் வைக்க வேண்டும். இதன் ப்ரயோஜனம் ப்ராம்மணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஸர்பங்கள் முதுமையிலிருந்து விடுபடுவதற்கு உபாயத்தை தேடின. கத்ருனுடைய மகனுன கஸர்ணீரன் இந்த மந்தரத்தை முதுமையை போக்கக் கூடியதாகக் கண்டு பிடித்தான். இந்த மந்தரத்தை ப்ரயோகித்து பாம்புகள் முதுமையில் பழைய தோலை உறித்து விட்டு மறுபடியும் புத்துணர்ச்சி பெற்று விடுகின்றன. (பாம்பு தோலை உரித்து புத்துணர்ச்சி அடைவதை லோகத்தில் பார்க்கிறோம்) அதேபோல், கார்ஹபத்யாக்னி என்றும் வீரியத்துடன் இருப்பதற்கு இந்த மந்தரம் உதவுகிறது.

ஏழு சமித்துகள் (அரசு, அத்தி, புரசு, வஹ்னி, வைகங்கதம், இடிவிழுந்த மரத்தின் சமித்து, தாமரை).

ஏழு நாக்குகள் (காலீ, கராளீ, மனோஜவா, ஸீலோஹிதா, ஸீ தூம்ரவர்ணு, ஸ்புலிங்கினீ, விச்வருசீ)

ஏழு விதமான சமித்துகள் கொண்டு வருவதற்கு கூறப்பட்டுள்ள மந்தரங்கள் (सप्त ऋषय:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏழு பிரியமான இடங்கள் (கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி, ஸப்யம் ஆவஸத்யம், ப்ராஜஹிதம், ஆக்னீத்ரீயம்)

ஏழு ஹோதாக்கள் (ஹோதா, ப்ரசாஸ்தா (மைத்ராவருணன்) ப்ராஹ்மணா சகும்ஸி, போதா, நேஷ்டா, ஆக்னீத்ரன், அச்சாவாகன்.)

ஏழுவிதமான ஸோமயாகங்கள்—அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, அதிராத்ரம், அப்தோர்யாமம், வாஜபேயம்.

ஏழு யோனிகள் மேற் சொல்லப்பட்ட கார்ஹபத்யாதி ஏழு அக்னி ஸ்தானங்கள் இந்த மந்தரம் ஸ்மார்த்தத்தில் கடைசியாக சொல்லி ஹோமம் செய்கிறோம்.

(सप्तते अग्ने...सप्तयोनी रापृणस्व घृतेन।)

அனுவாகம்—5. (उपप्रयन्तो अध्वरं)

இதில் கூறப்பட்ட மந்தரங்களின் விளக்கவுரை ஏழாவது அனுவாகத்தில் கூறப்பட்டுள்ளது.

அனுவாகம்—6. (संपश्यामिप्रजा)

பிள்ளை எவ்வாறு தகப்பனாரிடம் உரிமையுடன் பழகி தனக்கு வேண்டியவைகளை அடைகிறானோ, அது போல் புத்ரர்கள் போன்ற நாங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தகப்பனுர் போன்று இருக்கிற ஹே அக்னியே, உன்னை அணுகி, நாங்கள் எல்லாவிதமான க்ஷேமத்தையும் அடையவேண்டும். எப்பொழுதும் எங்கள் வீட்டிலேயே, எங்கள் அருகிலேயே இருக்க வேண்டும். எங்களுக்கு எல்லாவிதமான செல்வத்தையும் கொடுப்பாயாக. இந்த உபஸ் தானத்திஞல் ப்ரார்த்திக்கபடுகின்ற விஷயங்கள், ஆயுஸ், வர்சஸ், ஊனமில்லாத சரீரம், ஊனமற்ற பசுக்கள், குழந்தைகள், நூறு வயது, யஜமான னுக்கு சத்ரு அழிவு.

அனுவாகம்—7. (यवज्ञोवा एषः)

अग्निर्मूर्धा என்ற மந்தரத்திஞல் உபஸ்தானம் செய்தால் தனக்கு சமானமானவர்களுள் தான் தலைவனுக ஆகிருன். மனித லோகத்தில் மிகவும் ப்ரஸித்தமானவனுக ஆகிருன். उभाविन्द्राग्नी என்ற மந்தரத்திஞல் உபஸ்தானம் செய்தால் இந்திர னிடமிருந்து பலமும், அக்னியினிடமிருந்து தேஜஸ்ஸும் கிடைக்கிறது. ஆக்னீபாவமானீ ருக்குகளால் அக்னி உபஸ்தானம் ஒரு வருஷத் திற்கு பிறகு செய்யவேண்டும். அதஞல் அக்னி புத்துணர்ச்சி பெருகிருர். யஜமானனையும் பரிசுத்தம் செய்கிருர். உபஸ்தானம் என்பது அக்னி ப்ரார்த்தனை என்பதுதான்.

எவ்வாறு தரித்ரன் எப்படி பணக்காரனிடம்,
ஒரு சிறு பொருளை, பேட்டி காணும் போது
காணிக்கையாகக் கொடுத்து விட்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நமஸ்காரம் செய்கிறுர்ே அதுபோல் அக்னி பகவானுக்கு ஹோமம் செய்துவிட்டு வேண்டிய வைகளை ப்ரார்த்திக்கப்படுகிறது.

அனுவாகம்—8. (संपश्यामि प्रजा अहमिलाद)

மனுஷ்ய ப்ரஜைகளும், பசுக்களும், கன்று களும் என் வீட்டில் எப்பொழுதும் ஸ்திரமாக இருக்கட்டும். ஆஹவனீய உபஸ்தான மந்த்ரத் திஞல் ஸ்வர்கலோக ப்ராப்தி. இவ்வுலகில் நிலை யாக இருப்பதற்கு கார்ஹபத்ய உபஸ்தானம் அவசியம். காயத்ரி ருக்கிஞல் தேஜஸ், வீரஞன புத்ரர்கள், பலம் இவை கிடைக்கும், மேலும் ஸோம பானத்தை அருந்தியவஞக ஆவான். ப்ரஹ்ம வர்சஸ் அடைகிறுன், சுகமான இரவு இவைகள் ஏற்படுகின்றன. புத்ரர்களுடைய பெயரைச் சொல்லுவதால் ஜீரணசக்தி குறையாத புத்ரர்கள் உண்டாகிறுர்கள். பிறக்கப் போகின்ற பையனும் தேஜஸ்வியாகவும், ப்ரஹ்மவர்சஸ் உள்ளவஞகவும் பிறக்கிறுன். மேலும் பிறந்த பையனும் தேஜஸ்ஸையும், ப்ரஹ்மவர்சஸ்ஸையும் அடைகிறுன்.

அனுவாகம்—9. (अग्निहोत्रं जुहोति)

முன் சொன்ன உபஸ்தானமானது அக்னி ஹோத்ரத்திற்கு அங்கம். இந்த அனுவாகத்தில் அக்னிஹோத்ரம் செய்ய வேண்டும் என்று விதிக் கப்படுகிறது. அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்ரவ்யமானது அழியாமல் எஜமானனுடைய சொத்தாகவே இருந்து வருகிறது. எப்படி பிதாவினுடைய வீரியம் மாதாவினுடைய யோனியில் சேர்க்கப்பட்டு அழியாமல் இருப்பதுபோல், அக்னியில் போடப்பட்ட ஹவிஸ் அழியாமல் யஜமானனுடைய சொத்தாகவே இருக்கிறது.

அக்னியில் போட்ட ஹவிஸ் சாம்பலாகிவிடும் என்று சந்தேகம் ஏற்பட்ட பொழுது எப்படி அக்னியினுல் எரிக்கப்பட்ட தாவரங்கள் மழை காலத்தில் தீவரமாக ஒன்றுக்கு பண்மடங்காக முளைக்கிறதோ அதுபோல் தனம் விருத்தி அடைகிறது. இது போல் உபஸ்தானம் செய்கிற யஜமானன் நல்ல ப்ரஜையை அடைந்து மேலும் மேலும் செல்வங்களால் விருத்தி அடைகிருன்.

தேவர்களுடைய சொத்தான பசுவையும், அடையப் போகின்ற பசுக்களையும், அசுரர்கள் இரவில் திருடிச் சென்று விட்டார்கள். பசுக்களை இழந்த தேவர்கள் அக்னியை ஸ்தோத்ரம் செய்து பசுவை அடைந்தனர் தேவன் இவ்வுலகிலிருந்து ஸ்வர்க்க லோகத்திற்கு போனுன். மறுபடியும் இவ்வுலகத்திற்கு வந்தான். வந்தவுடன் இவ்வுலகில் மரணம் உண்டு என்று அறிந்து, பயந்து அக்னியை ஸ்தோத்ரம் செய்து அக்னி மூலமாக ஸ்வர்கத்தை அடைந்தான். இதை அறிந்து எந்த யஜமானன் உபஸ்தானம் செய்கிருனே அவன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்வர்கத்தை அடைகிருன். சம்பூர்ண ஆயுளையும் அடைகிருன். உபஸ்தானத்திஞல், கார்ஹபத்யம் ஆஹவனீயாக்னி இரண்டும் யஜமானனுக்கு வசமாகி விடுகிறது. எப்படி உலகில் கீழ்நிலே யில் உள்ளவன் நன்ருக கல்வி முதலியவைகளால் உயர்ந்த ஸ்தானத்தை அடைகிருனே, அது போல் யஜமானன் அக்னியை உபஸ்தானம் செய்வதால் தனக்கு உயர்ந்த பதவியைப் பெருகிருன்.

உபஸ்தானம் ,வேண்டுமா — வேண்டாமா என்று சர்ச்சை செய்து, அவசியம் செய்ய வேண்டும், ஏனென்ருல் உபஸ்தானம்தான் யஜமானனுக்கு ஆசீர்வாதம். ஆசீர்வாதத்திற் காகதான் யஜமானன் யாகம் செய்கிருன். தினமும் உபஸ்தானம் மூலம் அக்னியிடம் யாசிப்பது என்பது அலக்ஷ்யத்தை உண்டு பண்ணும் என்று சிலர் சொல்ல, அதற்கு பதில் சொல்வது போல் அக்னிக்கும் ஸ்தோத்ரத்தில் பிரியம் இருப்பதாலும், யஜமானனுக்கு பலன் இருப்பதாலும் அலக்ஷிய ஸ்வபாவம் ஏற்படுவ தில்லை என்று கூறுகிறது வேதம்.

அனுவாகம் 10. (ममनामप्रथमं)

முன்பாதியில் வெளியூர் செல்லப் போகிற யஜமானன் செய்யவேண்டிய உபஸ்தான மந்தரங்கள். பின் பாதியில் தர்சபூர்ணமாஸ இஷ்டிக்கு அங்கமான மந்தரங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—11. (वैश्वानरोन ऊत्या)

காம்யேஷ்டிக்கு வேண்டிய புரோனுவாக்யா, யாஜ்யா மந்தரங்கள்

வைச்வாநர இஷ்டி—1. தன் மேல் சுமத்தப் படுகிற அபவாதத்தை போக்கவும், நல்ல சக்தியை அடையவும் இந்த இஷ்டி. பரிசுத்தத் தன்மை, தேஜஸ், சாப்பாடு கிடைத்து ஜீரண சக்தி, உடல் வலிமை, பசு விருத்தி இவைகளை அடைய வைச்வாநர தேவதையை மாத்ரம் உத்தேசித்து இஷ்டி செய்வது.

2. தர்சபூர்ண மாஸத்தை உரிய காலத்தில் செய்யாததற்கு ப்ராயச்சித்தமாகவும் இதை செய்யலாம்.

3. ஆதானம் செய்து சீரும் செழிப்பும் அடையாமல் இருந்தால் அதை அடைவதற்கு வைச்வாநர தேவதையும், தனி அக்னியையும் தேவதையாகக் கொண்ட இஷ்டியைச் செய்ய வேண்டும்.

4. ப்ரஜைகள் நிறைந்த க்ராமத்தை விரும்பு கின்ற யஜமானன், வைச்வாநர தேவதையையும் மருத் கணங்களை தேவதையாகக் கொண்ட இஷ்டியை செய்ய வேண்டும். மருத்கணங்களை உபாஸிப்பதால் மனுஷ்ய ப்ரஜைகளை தனக்கு வசப்பட்டவர்களாக ஆக்கிக் கொள்ளுகிறான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

5. யுத்தத்தில் ஜெயிக்க விரும்புகிறவன் அதிதியை (अदिति) தேவதையாகக் கொண்ட இஷ்டி செய்யவேண்டும். அந்த இஷ்டியின் மந்தரங்களுள் மேல் சொன்ன இஷ்டிகளில் காம்யேஷ்டிகளும் அடங்கியவை.

முதல் காண்டம் 6-ம் ப்ரச்னம்

தர்சபூர்ணமாஸ இஷ்டியில் யஜமானன் சொல்ல வேண்டிய மந்தரங்கள் பெரும்பாலும் கூறப்படுகின்றன. சில இடங்களில் அதற்கு விளக்கமும் கூறப்பட்டிருக்கிறது.

அனுவாகம்—1. (सन्त्वा सिञ्चामि)

நெய்யை எடுக்கும் போது யஜமானன் சொல்ல வேண்டிய மந்தரங்கள். எடுத்த நெய்யை யஜமானன் மந்தரத்தை சொல்லி நெய்யைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் எல்லா ஹவிஸ்ஸும் நெய்யினுல் அபிகாரம் செய்து சுத்தமாக்கப்படுகிறது. அது போல் நெய்யை சுத்தப்படுத்த எதனுல் அபிகாரம் செய்யவேண்டும் என்று வேதவ்யுத்பன்னர்கள் விசாரித்து கீழ்க் கண்டவாறு முடிவு செய்தார்கள். ஸத்யத்தினுல் நெய்யை அபிகாரம் செய்யவேண்டும் என்று தீர்மானித்தனர். ஸத்யம் என்பதற்கு இவ்விடத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தில் கண் என்பது பொருள். இதைப் பற்றி ஆதான கர்மாவை விவரிக்கும் ப்ராம்ஹண பாகத்தில் கூறப்பட்டுள்ளது.

வாயால் பொய் சொல்லுகிறான். மனதினாலும் பொய்யை நினைக்கிறான். கண்ணால் இருப்பதைத்தான் பார்க்கிறான். ஆகையால் கண் உண்மையான பொருளைத்தான் பார்க்கும்.

ஆகையால் கண் என்கிற சத்தியத்தினால் நெய்யை பார்ப்பது நெய்க்கு அபிகாரம் ஆகும்.

அனுவாகம்—2. (ध्रुवोऽसि ध्रुवः)

ஹவிஸ்ஸை ஹோமம் செய்யும் போது யஜமானன் சொல்ல வேண்டிய மந்தரங்கள். முதல் மந்தரம் பரிதிகளை போடும் போது சொல்ல வேண்டியது.

இதே பரிதிகளைப் போடும் போது மந்திர மில்லாமல் ஸ்மார்த்தத்தில் செய்கிறோம்.

ஆஜ்யபாக அனுமந்தரன மந்தரம் "சக்ஷுஷ் மான் பூயாஸம்" என்று இவ்வாறு சொல்வது பொருத்தம் என்று இரண்டாம் காண்டம், 6-ம் ப்ரச்னத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

ப்ரயாஜ யாகங்களால் நூறு ருதுக்களுடைய தேவதைகள் த்ருப்தி அடைந்து யஜமானனையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்ருப்தி செய்விக்கும்படி கூறப்பட்டு இருக்கிறது. தர்சபூர்ணமாஸ இஷ்டிகள், அதன் தேவதைகள் பௌர்ணமாஸ இஷ்டியில் ஆக்னேயாகம், உபாம்சு யாஜ யாகம், அக்னீஷோமீய யாகம் என்று மூன்று யாகங்கள் முக்யமானவை, ஆக்னேய யாகத்திற்கு தேவதையான அக்னி, அன்னம் கிடைத்து ஜீரணசக்தி உடையவனாக யஜமானனை செய்கிறார். உபாம்சுயாக தேவதையான விஷ்ணு ஹோமத்தால் திருப்தி அடைந்து சத்ருபாதை இல்லாதவனாகச் செய்கிறார். அக்னீஷோமீயயாக தேவதையான அக்னீஷோம தேவதை துஷ்டர்களை விலக்கி காப்பாற்றுபவனாக இருக்கிறார். இந்திராக்னி தேவதை நல்ல உடல் வலிமையையும், அன்னஸம்ருத்தி, ஜீரணசக்தி இவைகளை கொடுக்கட்டும், இந்திரன் இந்திரியங்களுக்கு வலிமையை கொடுக்கட்டும். மஹேந்தரன், சிறந்த மகிமையை உடையவனாகவும், ஸ்விஷ்டக்ருத அக்னி ஆயுஸ் உள்ளவனாகவும், ஆக்கட்டும், யாகயக்ஞம் செய்து பிரஸித்தியையும் எஜமானனுக்கு செய்யட்டும்.

அனுவாகம்—3. (अग्निर्मा दुरिष्टात् पातु)

ஹவிஸ்சேஷமான இடா பாகத்தை ஸ்வீகரிக்கும் போது யஜமானன் சொல்ல வேண்டிய மந்தரம் (அனுமந்தரனம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—4. (बर्हिषोऽहं देवयज्यया)

அனுயாஜம் முதலிய யாகங்களுக்கு அனு மந்தரனம் சொல்ல வேண்டிய மந்தரங்கள். இதனுல் ப்ரஜை, பசு ஆயுள் யக்ஞத்தினுடைய ப்ரதிஷ்டை ப்ரார்த்திக்கப்படுகின்றன. அக்னி முதலிய தேவதைகளுக்கு ஹவிர்பாகம் கொடுத்த தின் மூலம் அவர்கள், யக்ஞவிரோதியான அசுரர் களை ஜெயித்து சிறப்பை அடைந்தனர். அதை அனுசரித்து யஜமானனும் பாபம் என்கிற விரோதியை ஜெயித்து சிறப்பைப் பெருகிறுர்.

ஹோதா ஸூக்தவாக மந்திரத்தால் ஆயுராதி களை ப்ரார்த்திக்கும் போது யஜமானன் ... மந்தரங்களை சொல்லவேண்டும். இதனுல் புத்ர, பௌத்ராதி ஸந்ததி விருத்தியும், அன்னம், ஆயுஸ் முதலியவைகளும் இந்திரனிடமிருந்து பெருகிறேம் என்று இந்த மந்தரத்தின் கருத்து. பரிதிகளை அகற்றும் போது சொல்ல வேண்டிய அனுமந்தரணம். அதனுடைய பொருள்—பரிதி குதிரைக்கு கடிவாளம் போல் அமைந்துள்ளது. அக்னிக்கு கட்டுபாடுகளாக அமைந்துள்ள பரிதி களை அகற்றுவதால் சந்தோஷமுள்ள அக்னி யஜமானனுக்கும், மற்றவர்களுக்கும் செல்வம், உணவு முதலிய சௌக்யங்களை கொடுக்கட்டும். தேவதைகளிடம் நாங்கள் அவர்களுக்கு ஹவிர் பாகம் கொடுத்தவர்களாக எடுத்து கூறட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பத்னீ சம்யாஜ யாகங்களுக்கு அனுமந்தரண மந்தரங்கள்.

அனுவாகம்—5. (आप्यायतान्ध्रुवा)

அத்வர்யு ஆஜ்யத்தை எடுக்கும் போது யஜமானன் சொல்ல வேண்டிய அனுமந்தரண மந்தரங்கள்.

ப்ரணீதா ஜலத்தை கொண்டு வரும் போது சொல்ல வேண்டிய மந்தரமும், நான்கு திசைகளிலும் ப்ரணீதா ஜலத்தை விடும்போது சொல்ல வேண்டிய மந்தரங்களும் கூறப்பட்டுள்ளன. இதன் கருத்து மாஸாதி அபிமான தேவதைகள், யாக வேதியில் இருந்து கொண்டு அந்தந்த திசையை சுத்தப்படுத்தட்டும். இதையே மந்தர மில்லாமல்

ஸ்மார்த்த கர்மாக்களில் எல்லா திக்குகளிலும் ஜலத்தை விட்டு, மீதியைக் கீழே கொட்டி, சம்பந்தப்பட்ட தம்பதி முதலியவர்களுக்கு ப்ரோக்ஷணம் செய்யப்படுகிறது.

தர்சபூர்ணமாஸ இஷ்டியில் இதை அவப்ருத ஸ்நாநமாக கூறப்பட்டிருக்கிறது.

அனுவாகம்—6. (अगन्मसुवस्सुवरगन्म)

உபஸ்தான மந்தரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன ஆகவனீய அக்னியினுடைய அனுக்ர

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹத்தை பெற்றவனுகவும், ஸத்ஸந்ததி உடையவனுகவும், ஆயுஸ், வர்சஸ், ப்ரம்ம வர்சஸ், மூவுலகிலும் சத்ரு நாசத்தை உடையவனுகவும் யஜமானன் இருக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறது. செல்வம், அபம்ருத்யுநாசம், புஷ்டி, நல்ல யஜமானனுக இருத்தல். பூர்ண ஆயுஸ், சந்ததிகள் மேதா சக்தி உள்ளவர்களாக இருத்தல் முதலியவைகளை கார்ஹபத்யம் அக்னியிடம் ப்ரார்த்திக்கப்படுகிறது, யக்ஞவிருத்தி, தேவதைகளின் பாதுகாப்பு, அனுஷ்டானம் குறையாமலும் யக்ஞத்திற்கு சாதனமான செல்வங்கள் நிறைந்து இருக்கட்டும். திரும்ப திரும்ப யக்ஞானுஷ்டானம் செய்யும்படியும், அதற்கு தகுந்த ரித்விக்குகளும், அதற்குரிய தேவதா ஸம்பத், அன்ன ஸம்ருத்தி, ஸத்ஸந்ததி கொடுப்பவனுகவும், என்றும் விடுபடாடல் தொடர்ந்து கர்மானுஷ்டானங்கள் நடக்கும்படி செய்பவனுகவும், ப்ரயோகத்தில் குறைபாடு இல்லாததாகவும், நல்ல விஷயம் தெரிந்த சபையோர்களை உடையவனுக யக்ஞ பகவான் இருக்கட்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

அனுவாகம்—7. (ययार्जसमृतसोमा)

யஜமானன் சொல்ல வேண்டிய மந்தரங்கள், தர்சபூர்ணமாஸ சம்பந்தமான இஷ்டிகளின் விதிகள் கூறப்பட்டிருக்கின்றன. முதல் நாளே, அதாவது பர்வ காலத்திலேயே, நாளைக்கு யாகம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்யப் போகிறேன் என்று சொல்லி தேவ்தா பரிக்ரஹம் செய்யவேண்டும். ஆஹவனீயாக்னி தேவர்களின் இருப்பிடமாயும், ஆஹவனீய. கார்ஹபத்யாக்னிக்கு நடுவில், பசுக்களின் ஸ்தான மாகவும், கார்ஹபத்யாக்னி மனிதனுடைய ஸ்தானமாகவும், தக்ஷிணாக்னி பித்ருக்களுடைய ஸ்தானமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. யஜமானன் செய்ய வேண்டிய நியமங்கள் வ்ரதத்தை கடைப்பிடிப்பதற்காக சொல்லப்பட்டி ருக்கிறது. தர்பங்களை பரிஸ்தரணம் போட வேண்டிய விதி சிறந்தது என்று சொல்லப்படு கிறது. எவ்வாரெனில் ஏழையான மனிதர்கள் கூட, குளிர்ந்த காற்று, வெய்யில் இவைகளி லிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள வீட்டை விரும்புகிறார்கள். மஹிமை வாய்ந்த தேவர்கள் இருப்பதற்கு தர்பங்களால் இருப்பிடம் தயாரிப் பது நமது கடமை. ஒவ்வொரு கர்மாவிலும் தர்பத்தை பரப்புவதின் மூலம் புதியதாக தேவதைகளின் இருப்பிடம் தயாரிக்கப்படுகிறது. இவ்வாறு யஜமானன் செய்தால் முதல் நாளே தேவதைகள் அந்த யஜமானன் வீட்டில் வந்து வசிக்கிறார்கள். ஆகையால் கர்மாவில் பரிஸ் தரணம் போடுவது மிகவும் அவசியம்.

ஸ்மார்த்தத்திலும் மந்தரமில்லாமல் பரிஸ் தரனம் விதிக்கப்பட்டுள்ளது.

நியமத்தோடு இருக்கும்போது ஆஹாரவிதி சொல்லப்படுகிறது. காட்டில் விளைகிற நீவார

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தான்யத்தை சாப்பிடவேண்டும். அதனால் நெல் முதலிய தான்ய ஸமுருத்தியும், நீவாராதி தான்யங்கள் ஸமுருத்தியும் ஏற்படுகிறது. அவசியம் சாப்பிடவேண்டும். சுத்த உபவாஸம் தேவ் காரியங்களுக்கு தகுந்ததல்ல. यदन्नाञ्जन् उपवसेत् पितृदेवस्यँ स्यात् என்று

எந்த விதமான ஆகாரம் உட்கொள்ளாமல் அனுஷ்டானம் செய்வது என்பது பித்ரு காரியங்களுக்குத்தான். பித்ருக்கள், ஆகாரம் உட்கொள்ளாமல் கர்தா செய்யும் அனுஷ்டானத்தை, பித்ரு தேவதைகள் கொண்டாடுகிறார்கள். இதன் அடிப்படையில் தான், ஸ்ம்ருதிகளில் ச்ராத்ததிற்கு கர்தாவிற்கும் சாப்பிடுபவர்களுக்கும் நியமங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

சிஷ்டாசாரத்தில் பஞ்சாயதன பூஜை செய்பவர்ள் கூட, ச்ராத்தத்திற்கு வரிக்கப்பட்டு இருந்தால் ஸாளக்ராம தீர்த்தம் சாப்பிடாமலேயே ச்ராத்தத்திற்கு வருவது வழக்கம். யாகம் செய்யும் எஜமானன் ஆஹாரம் இல்லாமல் இருந்தால் பசியினால் களைத்து விடுவான் என்று அதற்கு பரிகாரமாக தீர்த்தத்தை அருந்தவும் என்று வேதம் கூறுகிறது. தீர்த்ததை சாப்பிடுவதால் களைப்பு நீங்குகிறது. மென்று உணவு சாப்பிடுவனாக ஆவதில்லை. களைப்பு குறைவதால் சாப்பிடாதவனாகவும் ஆவதில்லை. யாகம் வஜ்ராயுதம் போன்றது.

4

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பசி நமக்கு எதிரி. யாக சம்பந்தப்பட்ட இந்த உபவாஸத்தின் மூலம் வரப்போகிற ஜன்மாவில் ஏற்படக்கூடிய பசி என்ற எதிரியை அழித்து விடுகிறான். இந்த யாக அனுஷ்டானத்தினால் உணவு பஞ்சம் வராது.

அனுவாகம்—8. (योवैश्रद्धां)

யாகம் செய்ய வேண்டிய ஸாதன பாத்ரங்கள் தயாரிக்கும் முறை சொல்லப்படுகிறது.

ஜலத்தை பாத்திரத்தில் ஸம்ஸ்காரம் செய்து எடுத்து வைப்பது அப்ரணயனம் என்று சொல்லப்படுகிறது. இதனால் கர்மாவில் ரித்விக்களுக்கு ச்ரத்தையும், தேவர்களுக்கு நம்பிக்கையும் ஏற்படுகிறது.

யக்ஞ பாத்திரங்களை சேகரித்து வைக்கும் முறை மூன்று விதமாக உள்ளது. ஒவ்வொன்றாக அந்த பாத்திரங்களை தர்பத்தின் மேல் கவிழ்த்து வைப்பது ஒரு முறை. இரண்டு இரண்டாக கவிழ்த்து வைப்பது ஒரு முறை, ஒரே தடவையாக பாத்திரங்களை கவிழ்த்து வைப்பது ஒரு முறை. பித்ரு கர்மாக்களில் முதலில் சொன்ன முறையும், தெய்வீக கர்மாக்களில் இரண்டாவது முறையும், மனுஷ்ய சம்பந்தப்பட்ட கர்மாவில் மூன்றும் முறையும் அனுஷ்டிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்மார்த்தத்தில் கூட இம்மூன்று விதமும் அனுஷ்டானத்தில் உள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ச்ராத்த காரியம் பித்ரு காரியமாக இருப்பதால் தர்வீ முதலிய பாத்திரங்களை ஒவ்வொன்ருக தர்பை மேல் கவிழ்த்து வைக்கிரும். விவாஹம் முதலிய காரியங்களில் இரண்டு இரண்டு பாத்திரங்களாக கவிழ்த்து வைக்கிரும். உபநயனத்திலும், ஸ்நாந கர்மாவிலும், ப்ரம்மசாரிக்கு உபயோகப்படக் கூடிய தண்டம், மேகலை, மான்தோல், யக்ஞோப வீதம், இவைகளை சேர்ந்தார் போல் ஒரே சமயத்தில் வைக்க வேண்டும். விவாஹத்திற்கு முன்பு செய்யக் கூடிய ஸ்நாந கர்மாவில் குடை, செருப்பு, இரட்டை வஸ்த்ரம், பூணூல்கள், கண்ணாடி, இலந்தக் கொட்டை கோர்த்த மாலை, வாஸனை த்ரவ்யங்கள் இவைகளை ஹோம வேதியில் ஒரேசமயத்தில் சேர்ந்தார் போல் வைக்க வேண்டும்.

இஷ்டிக்கு வேண்டிய 20 கருவிகள் சொல்லப் பட்டிருக்கின்றன.

அவைகள்:—ஸ்ப்யம் (மரக்கத்தி) கபாலம், அக்னி ஹோத்ர ஹ்வனீ (சிறு மரப்பாத்திரம்) சூர்ப்பம் (முறம்) கிருஷ்ணாஜினம் (மான்தோல்) சம்யா (மரக்கட்டை) உலூகலம் (உரல்) முசலம் (உலக்கை) அம்மி குழவி—இவைகள் ஹவிஸ்ஸை தயாரிப்பதற்கு உபயோகப்படும் பாத்திரங்கள். ஸ்ருவம் (மரக்கரண்டிமுட்டை) ஜுஹூ (ஹோமம் செய்யும் மரப்பாத்திரம்) உபப்ருத் (ஜுஹூ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போன்ற மரப்பாத்திரம்) துருவை (ஜுஹு போன்ற மரப்பாத்திரம்) இடா பாத்திரம், பாத்ரீ (பித்தளைச் சட்டி) ப்ராசித்ரஹரணம் (காது போன்ற சிறிய மரப்பாத்திரம்) வேதம் (கன்றுக் குட்டி முழங்கால் போல் தர்பையை முறுக்கி செய்யப்பட்ட பொருள்) ஆஜ்யஸ்தாலீ, ப்ரணீதா பாத்திரம். ஜுஹு பாத்திரத்திற்கு வடக்கு புறத்தில் மேலும் நான்கு பாத்திரங்கள்—1. அன்வாஹார்ய ஸ்தாலீ (தக்ஷிணாக்னியில் சாதத்தை சமைத்து ரித்விக்குகளுக்கு தக்ஷிணை யாக கொடுக்க வேண்டும். அந்த சமையலுக்கு வேண்டிய பானை) 2. அச்மா (கல்) 3. உபவேஷம் (புரசங்களையை வெட்டி வந்து அதனுடைய அடி பாகத்தில் சிறு துண்டு வெட்டவேண்டும். இதற்கு உபவேஷம் என்று பெயர்.) 4. ப்ராதர் தோஹ பாத்திரங்கள் (பால் கறக்கும் பாத்திரங் கள்) வைக்கவேண்டும். தேவர்களுக்கு ஹோமம் செய்யப் போகிறேன் என்று சொல்லிவிட்டு ஹவிஸ்ஸை தயாரிக்க ஆரம்பிக்கவேண்டும். அப்பொழுது யஜமானன் மௌனமாக இருக்க வேண்டும். யக்ஞயோகம் என்ற கர்மா சொல்லப் பட்டிருக்கிறது.

அனுவாகம்—9. (प्रजापतिर्यज्ञमसृजत)

யக்ஞங்களின் சாதனமான பாத்திரங்கள் இரண்டு இரண்டாக 12 தடவை வைப்பதை கூறுகிறது. அதை அர்த்தம் தெரிந்து அனுஷ்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

டானம் செய்தால் பலன் அதிகம் என்று சொல்லி யிருக்கிறது. அக்னிஹோத்ராதி சிறிய கர்மாக் களையும், அக்னிஷ்டோமம் போன்ற பெரிய ஸோம யாகங்களையும், ப்ரம்ஹா ச்ருஷ்டி செய் தார். எப்படி தகப்பனார் கடைசி பிள்ளையினிடத் தில் அன்பு அதிகமாக செலுத்துகிருரே, அது போல் அக்னி ஹோத்ராதி சிறிய கர்மாக்களை பெரிய ஸோமயாகத்திற்கு சமமாக ஒப்பிட்டு ப்ரம்மாவினுல் கூறப்பட்டிருக்கிறது. இதை அறிந்து யாகம் செய்பவன் அக்னி ஹோத்ரம் போன்ற சிறிய கர்மாவினுலேயே அக்னி ஷ்டோமம் முதலிய ஸோமயாகமான பெரிய கர்மாக்களின் பலனை அடைகிருன் என்று கூறப் பட்டிருக்கிறது. இது சிறிய கர்மாக்களை புகழ் வதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரம்மா, இந்திரன் முதலிய தேவர்கள் தர்ச பூர்ணமாஸ இஷ்டியை ஈச்வரார்பண புத்தியோடு செய்தனர். ஆதலால் மேலான பதவியை அடைந்தனர். இதே போல் யார் இதன் பெரு மையை அறிந்து அனுஷ்டானம் செய்கிருனே, அவன் மேலான பதவியை அடைகிருன்.

அனுவாகம்—10. ([illegible])

ஹவிஸ்ஸை வேதியில் மந்தரத்துடன் வைக்க வேண்டிய முறை. இதே ப்ரச்னத்தில் இரண்டா வது அனுவாகத்தில் சொல்லப்பட்ட மந்தரங் களுக்கு விளக்கம் கூறப்பட்டிருக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

भूर्भुवस्सुवः என்று வியாஹ்ருதிகளைச் சொல்லி அக்னிஹோத்ர ஹவிஸ்ஸை வேதியில் வைக்க வேண்டும். வியாஹ்ருதியின் உபயோகத்தின் பலனைக் க்ருதி பலவிதமாக எடுத்து காட்டப் பட்டிருக்கிறது, மழை, நல்லவர் தீயவர் என்று பாராமல் எல்லோருக்கும் பெய்வதுபோல், வியாஹ்ருதியை புரோனுவாக்யா மந்தரத்தின் நடுவில் ஒரு வியாஹ்ருதியும், யாஜ்யா மந்தரத்திற்கு முன்பு இரண்டாவது வியாஹ்ருதியும், மூன்ருவது வியாஹ்ருதி யாஜ்யா மந்தரத்திற்கு நடுவில் உச்சரிப்பதால் எல்லா யஜமானர்களுக்கும் யக்ஞ பலன் சமமாக கிடைக்கும்.

அனுவாகம்—11. (यो वै सप्तदशं)

ஆச்ராவய போன்ற மந்தரங்களின் சிறப்பை எடுத்துச் சொல்லி மந்தரங்களை உபயோகிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. 17 அக்ஷரங்களைக் கொண்ட 5 மந்தரங்கள் யாகந் தோறும் உபயோகிக்கப் படவேண்டியவை. இந்த 5 மந்தரங்களை உபயோகித்தால்தான் யக்ஞம் சரியானபடி அனுஷ்டித்ததாக ஆகும். 1. ஆச்ராவய 2. அஸ்து ச்ரௌஷட் 3. யஜ 4. யேயஜாமஹே 5. வௌஷட், இந்த ஐந்து மந்தரங்களால்தான் யாகத்தின் சரீரம் தயாராகிறது. மற்றவை சரீரத்திற்கு அலங்காரமான உடை அணி போன்ற

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அங்கங்களாகும். அனு மந்தரங்களின் பொருள் கூறப்பட்டிருக்கிறது.

அனுவாக—12. (इन्द्रं वो विश्वतस्परि)

காம்யேஷ்டியின் யாஜ்யா மந்தரங்கள் கூறப் பட்டிருக்கிறது.

முதல் காண்டம் 7-வது ப்ரச்னம்

அனுவாகம்—1. (पाकयज्ञं वा अन्वाहिताग्नेः)

முதலில் 7 பாக யக்ஞங்களை சொல்லிய பிறகு அதனுடைய பலன் இஷ்டிகளில் செய்யக்கூடிய இடா பக்ஷணத்தினுல் (ஹோம சேஷ பக்ஷணம்) ஏற்படுகிறது.

ஆபஸ்தம்பர் கீழ்க்கண்டவாறு 7 பாக யக்ஞங் களைச் சொல்லியிருக்கிருர்.

1. ஔபாஸனம் 2. வைச்வதேவம் 3. ஸ்தாலீ பாகம் (பார்வணம்) 4. அஷ்டகா ச்ராத்தம் 5. மாஸி ச்ராத்தம் 6. ஸர்ப பலி 7. ஈசான பலி. இடையை பசுவாக வைத்து அதற்கு கன்று, கறப்பவன் கிடைக்கக்கூடிய பலன் இவைகளை ரூபகம் செய்து எடுத்துக் கூறப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யக்ஞத்தின் ஸாரத்தை தேவதைகள் எடுத்துக் கொண்டனர். அசுரர்களின் பலத்தை யாகம் எடுத்துக் கொண்டு விட்டது. இவை யக்ஞதோஹம் எனப்படும். அசுரர்களின் பலம் போய்விட்டதால் அவர்கள் தோற்றனர். ஹோதாவை பார்த்துக் கொண்டு வாயுவை மனதி ஞல் த்யானம் செய்தால் எஜமானனுக்கு யாகத் தின் பலன் பூர்ணமாகக்கிடைக்கிறது.

தேவர்கள் தர்சபூர்ணமாஸ இஷ்டியின் மூலம் ஸ்வர்க்க லோகத்தை அடைய முயற்சித்தனர். மனு பாகயக்ஞத்தை செய்து களைத்துவிட்டார். இடை என்பதுதான் பாகயக்ஞமாகக் கூறப்படுவ தால் இடோபாஹ்வானம் செய்வதில் மனுவுக்கு கருத்து இருந்தது. இடா தேவதை மனுவிடம் வந்து சேர்ந்தது. இடா பக்ஷணத்தின் மூலம் பசு ஸம்ருத்தி கிடைக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ப்ரதான யாகம், ஸ்விஷ்டக்ருத் யாகம் இவைகளுக்கு பிறகு அனுயாஜ யாகத் திற்கு முன்பு இடாபக்ஷணம் விதிக்கப்பட்டிருக் கிறது. அசுரர்கள் சாப்பிட்டுவிட்டு மேலே செய்யவேண்டிய காரியங்களை மறந்தனர். அதனுல் அவர்களுடைய அனுஷ்டானம் பூர்த்தி யாக வில்லை; தேவர்கள் ஜாக்கிரதையாக இருந்து ப்ரஹ்ஸ்பதியின் மூலமாக, நடுவில் சம்பந்த மில்லாத இருந்ததை அனுயாஜ யாகங்களின் மூலம் சேர்த்து வைத்தனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாப்பிட்டவுடன் அதற்கு மேல் உள்ள அனுஷ்டானங்கள் அசுரர்களுக்கு ஏற்பட்டது போல விடப்பட்டுவிடும் என்ற கருத்தில் தான் இஷ்டி முதலிய ச்ரௌத கர்மாக்களிலும் ஸ்மார்த்த கர்மாக்களிலும் போஜனம் கடைசியில் விதிக்கப்பட்டிருக்கிறது.

யக்ஞ தக்ஷிணையை கொடுத்த பிறகு யஜமான னுக்கு குறைவு ஏற்படாமல் ஸம்ருத்தி ப்ரார்த் திக்கப்படுகிறது.

அனுவாகம்—2. संश्रवा ह सौवर्चनसः

இடையினுடைய (ஹவிஸ்சேஷம்) குண விஷயங்களை பற்றி ஸம்ச்ரவஸ், துமிஞ்சர் இருவரும் கேள்வி பதில் மூலமாக எடுத்துக் கூறு கிறார்கள். இடையை கோ ரூபமாகவும், பூமியாக வும், மழை ரூபமாகவும் வர்ணிக்கப்பட்டிருக் கிறது கோ தேவதா ரூபத்தில் இருக்கும் சிறப்பை இரு முனிவர்களும் விளக்குகிறார்கள். ப்ராண வடிவில் தேவர்களையும், அபான வடிவில் பித்ருக்களையும், வியான வடிவில் மனிதர்களையும் தாங்குகிறது. பூமி ரூபமாகவும் இருக்கும் பொழுது ஓஷதிகளாக இருப்பவைதான் அன்ன மாக மாறுகிறது. பூமியில் பசுக்களுக்கு வேண்டிய புல்லாகிற ஓஷதிகளாகவும், மனிதர் களுக்கு வேண்டிய நெல் முதலிய தான்ய ரூபத்தி லும் இருக்கிறது. வியாதியினால் பீடிக்கப்பட்டவர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களுக்கு அன்ன ரஸமாக இருந்து ப்ரஜைகளை காப்பாற்றுகிறது. மழை ரூபமாக இருந்து கொண்டு மழை பொழிந்து தாவரங்களை செழிக்கச் செய்து அதை உண்ட பசுவினிடமிருந்து பால், தயிர், நெய் போன்றவற்றையும், ஜலத்தினாலும் ப்ரஜைகளை ஜீவிக்கச் செய்கிறது. அப்பேற்பட்ட இடா தேவதையைக் கூப்பிட்டு பக்ஷணம் செய்வது தோஷமில்லாததாகும். இதை தெரிந்து அனுஷ்டானம் செய்தால் விசேஷ பலன், நல்ல ஸந்ததி ஏற்படும். நல்ல உணவும், ஜீரண சக்தி உள்ள மனிதர்களாக ஆகிறார்கள்.

அனுவாகம்—3. (परोक्षंवा अन्ये)

இஷ்டியில் தக்ஷிணையாகக் கொடுக்கும்படி அன்வாஹார்ய பசனம் விதிக்கப்பட்டுள்ளது; தக்ஷிணாக்னியில் சமைக்கப்பட்ட அன்னம். இந்திராதி தேவதைகள் நம் கண்களுக்கு புலப்படாதவர்கள். யாகம் ப்ரத்யக்ஷம், ரித்விக்குகள் ப்ரத்யக்ஷதேவர்கள், அவர்களுக்கு கொடுக்கக் கூடிய தானம் சிறந்தது. மேல் சொன்ன அன்னத்தைக் கொடுப்பது ப்ரத்யக்ஷ தேவதையை த்ருப்தி செய்ததாக ஆகிறது. இந்த தக்ஷிணை கொடுத்தால் யக்ஞத்தில் தெரிந்தோ தெரியாமலோ ஏற்படுகின்ற குறைகள் நீங்குகின்றன. ரித்விக்குகள் தேவதூதர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்களை த்ருப்தி செய்வது தேவ்தூதர்களை திருப்தி செய்ததாகும். தர்சபூர்ணமாஸ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இஷ்டியில் புரோடாசம் முதலிய ஹவிஸ்ஸுகளை அக்னி முதலிய தேவதைகளுக்கு ப்ரம்ஹா பங்கிட்டு கொடுத்தார் தனக்கு ஒன்றும் இல்லாததை உணர்ந்து அன்வாஹார்ய அன்னத்தை தனக்கு பாகமாக ஏற்றுக் கொண்டார். அந்த அன்னம் நிறைய இருக்கவேண்டும். ப்ரம்ஹா எங்கும் வியாபித்து இருப்பதால் ஸர்வ தேவ ஸ்ரூபீ.

தேவர்களைப் பார்த்து அதேபோல் அசுரர்களும் யாகம் செய்தனர். தேவர்கள் அன்வாஹார்யத்தைக் கண்டுபிடித்து அதை தானமாக கொடுத்து அனுஷ்டித்தனர். அசுரர்கள் இதை கவனிக்காமல் அன்வாஹார்யதானத்தை செய்யவில்லை. ஆகையால் தேவர்கள் வெற்றி பெற்றனர். அசுரர்கள் தோல்வி அடைந்தனர்.

ஆகையால் காரிய ஸித்திக்கு தக்ஷிணை மிகவும் முக்கியம்.

யாகத்தினுல் இஷ்ட தர்மமும் அன்வாஹார்ய தக்ஷிணையால் பூர்த்ததர்மமும் (கிணறு வெட்டுதல், தண்ணீர் பந்தல், ஏழைக்கு அன்னமளித்தல் முதலிய பொது தர்மங்கள்) செய்ததாக ஆகிறது. அக்ஷிதோஸி என்ற மந்தரத்தினுல் அன்னத்தை அபிமர்சனம் செய்ய வேண்டும். அதனுடைய பலன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவ்வுலகிலிருந்து கொடுக்கப்பட்ட ஹவிர் பாகம்தான் தேவதைகளுக்கு தேவலோகத்தில் உணவாக (அமிர்தமாக) ஆகிறது.

இந்த மந்தரத்தினால் அபிமர்சனம் செய்வதால் தேவலோகத்தில் அன்னம் தேவர்களுக்கு குறைவதில்லை.

அனுவாகம்—4. (बर्हिषोऽहं देवयज्यया)

மூன்று அனூயாஜ மந்தரங்களின் பலன்— ப்ரஜாஸ்ருஷ்டி, பசு ஸ்ருஷ்டி ஆயுள் விருத்தி மூன்றும் கிடைப்பதாக கூறப்பட்டிருக்கிறது. உஜ்ஜிதி மந்தரத்தை படிப்பதால் தர்சபூர்ணமாஸ இஷ்டிக்கு நிறைவு ஏற்படுகிறது. இதனால் தேவர்கள் அசுரர்களை தோற்கடித்து வெற்றி அடைந்தார்கள். சத்ருவை அழிப்பது இதனுடைய பலன். வாஜவதி மந்தர அனுமந்தரணத்திற்கு அன்னஸம்ருத்தி பலன், வேதம் என்கிற தர்பகொத்தை அபிமர்சனம் செய்வதால் கிடைத்த தனம், கிடைக்கவேண்டிய தனம், எதிரிகளிடம் சிக்கிய பணமும் அடையப்படுகிறது. யஜமானனுடைய க்ருஹத்தில் அன்ன ஸம்ருத்தி உள்ள ஸந்ததி உண்டாகிறது.

அனுவாகம்—5. (घृवांवं रिच्यमानां)

துருவை என்ற பாத்திரத்தில் நெய்யை எடுக்க எடுக்க குறையாமல் இருப்பதற்காக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆஜ்யஸ்தாலீயிலிருந்து நெய்யை துருவையில் எடுத்து விடவேண்டும். இதற்குதான் ஆப்யாய னம் என்று பெயர். இதை செய்யாவிடில் துருவை காலியாகிவிடும். அதனுல் யாகம் பூர்த்தியாகாது. யஜமானனுக்கு புலன் கிடைக்காது. அவனுடைய சந்ததிக்கும் அன்னக் குறைவு ஏற்படும். இதற்கு மாருக துருவை நிரம்பி இருந்தால் யாகம் பூர்த்தி யாகும் பலன் கிடைக்கும். ஸந்ததிகளும் அன்ன ஸமுருத்தி உடையவர்களாக ஆவார்கள். ஹவிஸ் ஸுனுடைய எஜமானன் பாகத்தை, அவன் சாப்பிடுவதால் யஜமானன் சக்தியுள்ளவனுக ஆகி திருப்தி அடைகிருர். ஜலம் நிரம்பிய பூர்ண பாத்திரத்தை வேதியில் கொட்டவேண்டும். அவ்வாறு செய்வதால் யக்ஞருபமான அம்ருதத்தை தன்னிடத்தில் வைத்துக் கொள்ளு கிருன் யஜமானன் வ்ரதத்தை தொடர்ந்து, தேவர்களும் பித்ருக்களும் வ்ரதத்தை கடைபிடிக் கிருர்கள். "ப்ராச்யாம் திசி" என்று தொடங்கும் மந்தரங்களைச் சொல்லி, தீர்த்ததை கீழே கொட்டி, தனக்கு ப்ரோக்ஷணம் செய்து கொள்வது எல்லா ப்ராணிகளுடனும் அவப்ருத ஸ்நாநம் செய்ததாக ஆகும். விஷ்ணுக்ரம மந்தரத்தை சொல்லுவதால் மூன்று லோகங்களையும் ஜெயித்தவனுக ஆகிருன்.

அனுவாகம்—6. ([illegible])

உபஸ்தான மந்தரங்களுக்கு விரிவுரை. ஆஹவனீயாக்னியை உபஸ்தானம் செய்யும் மந்தரம். ஆதித்ய உபஸ்தானத்திஞல ஆயுஸ்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வர்சஸ் ப்ரார்திக்கப்படுகிறது. ஸ்வர்கத்தை அடைவதற்காக விஷ்ணுக்ரமம் செய்யப்படு கிறது. அப்பொழுது இவ்வுலகிலிருந்து நழுவி விடுகிறான். இவ்வுலகில் எதிரிகளை அழித்து ஸ்வர்கத்திற்கு சென்று மறுபடியும் திரும்பி வருகிற யஜமானன் விஷ்ணுக்ரமம் செய்யத் தகுதி உள்ளவன்.

ஆத்ம ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும். செய்யும் முறையில் தெற்கு நோக்கி கிளம்பி, வடக்கு திசைமுடியும் வரை இருக்க வேண்டும். அதாவது வலது பாகத்தில் தொடங்கி இடது பாகத்தில் முடிக்க வேண்டும்.

மேற்படி ப்ரதக்ஷிண முறையினால் வலது பாகத்திற்கு இடது பாகத்தை விட பலம் அதிகம் என்று வேதத்தின் அபிப்ராயம்.

ஆகையால்தான் லௌகிக காரியங்களிலும் வலது கைதான் பெருவாரியாக உபயோகப்படுத்தப்படு கிறது. சூரியனும் மேரு மலையை வலமாக சுற்றி வருகிறார். அதே போல் நாமும் வலம் வரவேண் டும் என்று தெரிகிறது. ஆஹவனீய உபஸ் தானத்தில் மற்றவர்களைவிட தனவானாக ஆக வேண்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறது. கார்ஹபத்னி அக்னி எப்பொழுதும் இருப்பதினால் அதில் சில பூச்சிகள் விழுந்து இறக்க நேரிடும். அந்த பாபத்தை போக்கடிப்பதற்காகவும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தானும் சுத்தி அடைவதற்காகவும், அக்னி, பவமானன் இரண்டு தேவதைகளை சொல்லக் கூடிய ருக்குகளை சொல்லவேண்டும். இதனுல் அக்னிக்கும், யஜமானனுக்கும் சுத்தி ஏற்படு கிறது, இந்த உபஸ்தானத்தில், இருக்கிற புத்ரர்களின் பெயர்களையும், வரப்போகின்ற குழந்தைகளுக்கு சந்ததி என்று சொல்லுவதால் எல்லோரும் தேஜஸ்வியாகவும், ப்ரம்மவர்சஸ் உள்ளவர்களாகவும் ஆகிருர்கள்.

அனுவாகம்—7 (देव सवितः प्रसुव यज्ञं)

வாஜபேய யாக சம்பந்தமான மந்தரங்கள் சொல்லப்படுகின்றன. வாஜபேய யாகம், முதல் அஷ்டகம் 3-ம் ப்ரச்னத்தில் சொல்லப்பட்டிருக் கிறது. இந்த யாகம் ப்ராம்ஹணன், க்ஷத்ரியன் இவர்கள்தான் செய்யத் தகுந்தவர்கள். இதற்கு பலன் பூர்ண ஸ்வதந்தரம் தன்னைச் சேர்ந்த சமானமானவர்களுள் மிகவும் சிறந்தவனுக ஆகிருன். இந்த யாகத்தில் மீதி ஸோம யாகத் தில் செய்ய வேண்டிய அங்கங்களுடன் சில விசேஷ தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்று ஆஜிதாவனம் (ஓட்டப் பந்தயம்) சிறு கதை மூலமாக விளக்கப்பட்டிருக் கிறது. தேவர்களுக்கு தனித்தனியாக அக்னிஷ்டோமாதி ஸோமயாகங்கள் புலப்பட்டன. அதை அவர்கள் அனுஷ்டித்தனர். கடைசியில் வாஜபேய யாகம் எல்லோருக்கும் ஒரே சமயத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புலப்பட்டது. ஆகையால் யார் முதலில் அனுஷ்டிப்பது என்று போட்டியில் ஓட்டப் பந்தயம் வைத்து அதில் ப்ரஹஸ்பதி ஜெயித்தார். ஆகையால் அவர் முதலில் வாஜபேயத்தை அனுஷ்டித்தார். பிறகு இந்திரன் ப்ரஹஸ்பதியை ப்ரார்த்தித்து அவர் மூலம் தானும் அனுஷ்டித் தான். அதனுல் ப்ரஹஸ்பதி ப்ராம்ஹணர்களுள் தலைவராக இருக்கும் தன்மையையும் இந்திரன் க்ஷத்ரியர்களுக்குள் தலைவனுக இருக்கும் தன்மை யையும் அடைந்தான். இப்பொழுதும் இதை அறிந்து எந்த யஜமானன் வாஜபேய யாகம் செய் கிருனே, அவன் தனக்கு சமானமானவர்களுள் சிறப்பை அடைகிருன். இந்த யாகத்தினுல் தேவர்களுக்கு அன்னம் (வாஜம்) கிடைத்ததால், வாஜபேயம் என்று பெயர் வந்தது. வாஜபேய யாகம் செய்த யஜமானனுக்கு பிறக்கும் பையன் அன்ன ஸம்ருத்தி உள்ளவனுகவும், சாப்பிட்டு ஜீர்ணசக்தி உடையவனுகவும் பிறக்கிருன். மேலும் வாஜபேயம் என்பது வேதமாகவும். குரு தக்ஷிணையாகவும் சொல்லப்படுகிறது. இதை தெரிந்து வாஜபேய யாகம் செய்தால் அவனுக்கு வேதத்தை போதிக்கக்கூடிய ஸத்புத்ரன் பிறக் கிருன். இந்த மந்தரமே வாஜபேய உற்பத்திக்கு காரணம். இதை தெரிந்த யஜமானன் அந்த மந்தரத்தின் மூலம் விசேஷமான கௌரவத்தை அடைகிருன். சபையிலுள்ள வித்வான்கள் இவரை புகழ்ந்து கொண்டு அனுகுகிருர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேலும் இந்த வாஜபேயத்தை அனுஷ்டானம் செய்வேன் என்ற சொல்லை சொல்லுபவர்களாக ஆகிருர்கள் (மிகுந்த ச்ரத்தை உள்ளவர் என்று கருத்து.)

ப்ரம்ஹா அக்னிஷ்டோம யாகங்களை தேவர் களுக்கு பிரித்து கொடுத்துவிட்டு வாஜபேயத்தை தன்னிடத்தில் வைத்துக் கொண்டார். தேவர் கள், வாஜபேயம் தான் முக்ய யாகம்—ஆகையால் எங்களுக்கும் பங்கு வேண்டும் என்று கேட்டனர். அதற்கு ப்ரம்ஹா தேவர்களுக்கு உஜ்ஜிதி மந்திரங்களை வாஜபேயத்திற்குப் பதிலாக கொடுத்தார். இதன் மூலம் தேவதைகளுக்கு இதில் பங்கு கிடைத்தாக ஆயிற்று. இந்த மந்திரங்களில் அக்னி, அச்வினி தேவதைகள், விஷ்ணு, ஸோமன் போன்றவர்கள் அந்தந்த பாகத்தை அடைந்த தேவதைகளாக கூறப்படு கிருர்கள். இந்த மந்தரங்களை யஜமானன் ஆஜ் தாவனம் செய்யும் சமயத்தில் சொல்லவேண்டும். சில ப்ரதிக்ரஹத்தை செய்யக்கூடாது என்று சொல்லப்படுகிறது. தேவர்கள் வேதம், அன்னம் இந்த இரண்டுனுடைய அழுக்கை நீக்கினர்.

வேதத்லிருந்து நீக்கப்பட்ட அழுக்குதான் நாராசம்சம் அதாவது நரஸ்துதியாக அமைந்தது, அன்னத்தின் அழுக்குதான் சுரை (கள்ளு) ஆகையால் பாடகனுடைய பொருளையும், குடிகாரனுடைய பொருளையும் ப்ரதிக்ரஹம் செய்யக்கூடாது என்று கூறப் பட்டுள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாஜபேயம் சிறந்தது என்று சொல்லப்படுகிறது. மூன்று உலகங்கள், அவைகளின் அபிமான தேவதைகள் மூன்று, ரதந்தரம், ப்ருஹத், வாமதேவ்யம் என்று மூன்று ஸாமாக்களும், யாகத்திற்கு உபயோகப் படக்கூடிய ஜலம், தானியம், மரம் போன்ற த்ரவ்யங்களும் இந்த வாஜபேயிக்கு நிறைந்து இருக்கும். எல்லா விதமான வாக்குகளும் (ருக்குகள்) உபயோகப் படுவதால் எல்லா வாக்கையும் வாஜபேயி அடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் வாஜபேயம் செய்வதற்கு சிறந்த ரித்விக்குகளை தேர்ந்து எடுக்க தகுதி உள்ளவனுகவும், தான் யாகம் செய்த பிறகு, பிறருக்கும் யாகம் செய்விக்கத் தகுதி உள்ளவனுக ஆகிறான்.

வாஜபேய யாகத்திற்கு வேண்டிய விசேஷ ஸோம பாத்திரங்கள் (க்ரஹங்கள்) கூறப்படுகின்றன. தேவர்களுக்கு ஐந்திர வாயவாதி க்ரஹங்களால் கிடைக்காத பலன் அதிக்ராஹ்ய க்ரஹத்தின் மூலம் கிடைத்தது. ஆகையால் இந்த வாஜபேய யாகத்தில் அதிக்ராஹ்யம் என்ற ஐந்து க்ரஹங்கள் விசேஷமாக சொல்லப்படுகின்றன. இவை எல்லாவற்றிக்கும் இந்திரன் தேவதை. இதனுல் யஜமானனுக்கு இந்திரிய பலம் கிடைக்கிறது. ப்ரஜாபதி தேவதைக்கு 17 என்ற எண்ணிக்கை மிகவும் இஷ்டமானது ஆகையால் ப்ராஜபதியினுடைய ப்ரீதியை அடைய, ப்ரஜாபதியை தேவதையாகக் கொண்ட 17 க்ரஹங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களை வைக்கவேண்டும். தேவதைகளுக்கு ப்ரீதி கரமான ஸோமரஸத்தை 17 க்ரஹங்களில் எடுத்து வைக்கவேண்டும். மனிதர்களுக்கு ப்ரீதிகரமான ஸுரையை 17 க்ரஹங்களில் எடுத்து வைக்க வேண்டும். ஸோம க்ரஹத்தை க்ரஹிப்பதால் ப்ராம்ஹணனுக்கு உசிதமான ப்ரம்ம தேஜஸ் வருகிறது. ஸுராக்ரஹத்தை க்ரஹிப்பதால் யஜமானனிடம் உள்ள தோஷமும் அன்னத்தின் தோஷமான ஸுரையோடு கூட நீங்கி விடுகிறது.

ஸோமம் என்பது புருஷனாகவும், ஸுரா என்பது ஸ்திரீயாகவும் இருப்பதால் இரண்டும் சேருவது தாம்பத்யத்தை அடைகிறது. ஸோம க்ரஹங்களால் தனக்கு அபிமான தேவதையை யும், ஸுராக்ரஹங்களால் பத்னிக்கு அபிமான தேவதையையும் த்ருப்தி செய்கிறான். அதனால் ஸ்வர்கலோகத்தில் நல்ல ஸ்த்ரீயை அடைகிறான். ஸோமக்ரஹத்தினால் ச்ரேயஸ்ஸை அடைந்து, ஸுராக்ரஹத்தினால் பாபம் அகன்று விடுவதால் வாஜபேய யாகம் செய்தவர் மிகவும் பரிசுத்த மானவர். யாகம் செய்வதற்கும், தக்ஷிணை கொடுப்பதற்கும் தகுதியுள்ளவர். ஸோமக்ரஹ யாகத்தினால் முழுபலனையும் அடைவதற்கு தகுதி உள்ளவனாக ஆகிறான். ஸுராக்ரஹத்தை வைச்யர்களிடம் கொடுக்கும்படி விதிக்கப்பட்டிருக் கிறது. (ஸுரைக்கு ஹோமம் கிடையாது.) பொய்க்கு சமானமாக ஸுரை இருப்பதால். வைச்யனை பொய்யோடு சேர்த்தவனாக ஆகிறது,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தங்க பாத்திரத்தில் தேனை நிரப்பி ப்ரம்ஹா விடம் தானம் செய்யவேண்டும். வைச்யர்களிடம் கொடுத்த தங்கத்துண்டுகளையும், திருப்பி வாங்கி ப்ரம்ஹாவிடம் சேர்த்துக் கொடுக்கவேண்டும். வாஜபேயத்தில் தீக்ஷணீயேஷ்டி முதலியவை களில் அங்கமாக ப்ரயாஜம் முதலிய யாகங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஆனால் அக்னிஷ் டோமம் முதலிய ஸோம யாகங்கள் இதில் அடங்காது' வாஜபேயத்தில் எல்லா க்ருதுக் களும் எப்படி அடங்கும் என்று விசாரித்து வேத வித்பன்னர்கள் கீழ்கண்டவாறு முடிவு செய்தனர். அக்னிஷ்டோமாதிஸோம யாகங்களில் உள்ள பசு யாகங்கள் இதில் அனுஷ்டிக்கப்படுகின்றன. அதன் மூலம் மேல் சொன்ன யாகங்கள் வாஜபேயத்தில் அடங்கியவைகளாக ஆகின்றன. விசேஷமாக வாஜபேயத்திற்கு என்று ப்ராஜ பதியை தேவதையாகக் கொண்ட கருப்பு நிறங் கொண்ட 17 பசுக்கள் யாகத்ரவ்யமாக விதிக்கப் பட்டிருக்கின்றன. யாகத்தில் பசுக்கள் என்பது வெள்ளாட்டைக் குறிக்கும், விசேஷ குறிப்பு இல்லாதவரை. மருத்கணங்கள் யக்ஞத்திற்கு துடங்கல் செய்ததால் அவர்களை த்ருப்தி செய் வதற்காக ப்ரம்ஹா அவர்களுக்கு மலடான ஆட்டை ஹவிர்பாகமாக கொடுத்தார். ஸரஸ்வதி தேவதையாகக் கொண்ட பசுயாகத்தை (செம்மரி ஆடு), ப்ராஜாபத்ய பசுயாகத்தை செய்து விட்டு, கடைசியில் செய்ய வேண்டும். ஏனெனில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸரஸ்வதி ஸ்வரூபமாக இருக்கிற வாய் காது, மூக்கு இவைகளைக்காட்டிலும் சிறந்தது, அந்த ஆடு பற்கள் விழாததாக இருக்க வேண்டும். இதனால்தான் பற்கள் உள்ள மனிதர்கள் எல்லா அக்ஷரங்களையும் சரியாக உச்சரிக்கிறார்கள். ஸவிதா தேவர் வாஜபேய யாகத்தை யஜமானன் மூலமாக நடத்தி வைக்கிறார். ஸாவித்ர ஹோமம் ஒவ்வொரு ஸவனத்திலும் செய்யவேண்டும். தேரில் குதிரைகளை கட்டவேண்டிய மந்தரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அனுவாகம்—8. (देवस्याहं सवितुः प्रसवे)

ஆஜிதாவனத்திற்காக ரதத்தை ஓட்ட வேண்டிய மந்தரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. சாத்வாலத்தில் (யாக சம்பந்தமான கழிவுப் பொருள்கள் போடவேண்டிய இடம்) ரதத்தினுடைய சக்ரத்தை வைத்து, ப்ரம்மா அதில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஸாம கானம் செய்ய வேண்டும். சக்ரத்தை மூன்று முறை சுற்றிவிட வேண்டும். பிறகு மந்தரம் சொல்லி பேரி வாத்யம் அடிக்க வேண்டும். வாக் தேவதையினுடைய ஒலி வடிவமான சரீரம் துந்துபிவினுள் நுழைந்து கொண்டிருக்கிறது. ஆகையால்தான் துந்துபி வாத்யம் மனிதர்களைக் காட்டிலும் உறக்க சத்தம் செய்கிறது. இதனால் யஜமானனுக்கு வாக்சுத்தி ஏற்படுகிறது. யஜமானனிடம் மந்தர பூர்வமாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாட்டையை கொடுக்வேண்டும், பிறகு யஜமானன் ரதத்தில் உட்கார்ந்து குதிரைகளை ஓட்ட வேண்டும். 17 வில்லடி தூரம் ரதத்தில் செல்ல வேண்டும். எஜமானன் சேர்த்து 17 ரதங்கள் பங்கு கொள்ளவேண்டும். இந்த 16 ரதங்களை ஓட்டுபவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தங்கத் தகுடு கொடுக்கவேண்டும். இந்த வாஜபேய யாகத்திற்கு ஸ்தோத்ரங்கள் 17, தக்ஷிணையும் 17. சாமான்கள் ஒவ்வொன்றும் 17 இருக்க வேண்டும். 1) ரதம் 17 2) வண்டி 17 3) குதிரை 17 4) யானை 17 5) ஸ்வர்ண நிஷ்க பரிமாணம் 17 6) வேலைக்காரிகள் 17 7) வெள்ளாடு 17 8) செம்மரி ஆடு 17 9) வஸ்தரம் 17 10) பசு ஒன்றுக்கு 100 விதம் 17க்கு 1700 பசுக்கள் (பசு மாடுகள்) அர்வாஸி, ஸப்திரஸி, வாஜ்யஸி என்ற மந்தரங்களைச் சொல்லி ஓட்டவேண்டும். 4 வித மான குதிரை ஜாதிகளைக் குறிக்கிறது. தேவதை களை சுமப்பதால் ஹயம் என்றும், அசுரர்களை சும்ப்பதால் அர்வா என்றும், கந்தர்வகளை சுமப்ப தால் வாஜீ என்றும் மனிதர்களை சுமப்பதால் அச்வம் என்றும் சொல்லப்படுகிறது. இதில் 3 ஜாதி குதிரைகளை அக்னி, வாயு சூரியன் உருவமாக துதிக்கப்படுகிறது. அதனுல் இந்த ரதத்திற்கு யஜுர்யுக்த ரதம் என்று பெயர். மந்தரம் சொல்லி பூட்டிய ரதத்தை அத்வர்யுவுக்கு கொடுக்க வேண்டும். எல்லை வரை வேகமாக குதிரைகளை செல்லுங்கள் என்று மந்தரம் மூலம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூறுகிறார். இதனால் லோகங்களுக்கு எல்லையாக இருக்கிற ஸ்வர்க லோகத்தை அடைகிறான். கிழக்கு முகமாக ஓட்டவேண்டும், ஏனென்றால் கிழக்கே தான் ஸ்வர்கம் இருக்கிறது.

ப்ரஹஸ்பதியை தேவதையாகக் கொண்ட நீவாரதான்யத்தால் ஹவிஸ் தயாரித்து இஷ்டி செய்யவேண்டும். ஏனெனில் ஓட்டப்பந்தயத்தில் ப்ரஹஸ்பதி ஜெயத்தை பெற்றார். அதேபோல், தான்யங்களுள் சாரமான நீவாரதான்யத்தை தனக்கு ஹவிர்பாகத்திற்கு தகுந்த த்ரவ்யமாக தேர்ந்தெடுத்தார். இதனால் யஜமானனுக்கு அன்ன ஸம்ருத்தி ஏற்படுகிறது. இதைப் பாலில் பக்வம் செய்யவேண்டும். பாக்கி நெல் (சால்யம்) முதலிய தான்யங்களை காட்டிலும் மிகவும் பரிசுத்த மானதால் நீவார தான்யம் தேவதைகளின் அன்ன மாக சொல்லப்படுகிறது.

அனுவாகம் – 9. (क्षत्रस्योल्वमसि) (34 அடி உயரமுள்ள யூபம்)

யூபத்தில் ஏறுவதற்குள்ள மந்தரங்கள் சொல்லப்படுகின்றன. முதல் மந்தரத்தை சொல்லி யஜமானன் நெய்யில் நனைத்த வஸ்தரத்தையும், பத்னி தர்பத்தினால் செய்யப்பட்ட வஸ்தரத்தையும் கட்டிக் கொள்ளவேண்டும். இதை ஸ்வர்காரோஹணம் செய்வது போல் ஆகும் என்று சொல்லப்படுகிறது. மனைவியை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்தரபூர்வமாக அழைத்து ஸ்வர்கத்திற்கு நாம் இருவரும் ஏறிச்செல்வோம் என்று சொல்லி, யூபத்தில் ஏற ஆரம்பிக்கிறார். அந்த யூபம் 34 அடி உயரம் இருக்கவேண்டும். யூபம் 4 பக்கமும் பட்டையாக தீட்டப்பட்டு இருக்கவேண்டும் யூபத்திற்கு மேலே இருக்கக்கூடிய பாகம் மரத்தினால் செய்யப்பட்டு சஷாலம் என்ற பெயர் உடையதாக இருக்கிறது. இந்த யாகத்தில் சஷாலத்தை கோர்பதற்குள்ள ஆணி போன்ற பாகம் கிடையாது. அதனால் கோதுமையினால் யூபத்தை சுற்றி சஷாலம் போல் அமைத்து கட்ட வேண்டும். 17 வஸ்தரங்களை யூபத்தைச் சுற்றி கட்டவேண்டும். ஆயுர் யக்ஞேன கல்பதாம் என்ற 10 மந்தரங்களை சொல்லி யூபத்தின் மேல் ஏற வேண்டும். இதுதான் ஸ்வர்கத்தில் ஏறுவது போல் ஆகும். ஸ்வர்கத்தை அடைந்ததாக பாவித்து யூபத்தின் உச்சியில் உட்கார்ந்து கொண்டு கீழ்க்கண்ட மந்தரங்களைச் சொல்ல வேண்டும். "सुवर्देवाँ अगन्म...अभूम. நான்கு பெரிய ரித்விக்குகள் 4 திசைகளிலும் நின்று கொண்டு உவர் மண்ணை அரச இலையில் பொட்டலமாக செய்து அதை நீண்ட மூங்கிலில் கட்டி யஜமான தம்பதிகள் மீது அந்த பொட்டலத்தை இறங்கும் போது தலையில் விழும்படி வீசவேண்டும். எல்லோரும் சாப்பிடுவது அன்னம் எனப்படு கிறது. அரசர்கள் போன்றவர்கள் சாப்பிடும் உணவுக்கு அன்னாத்யம் என்று பெயர். உணவில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அப்பம், வடை முதலியவைகள் சேர்ந்தால் வாஜம் என்று பெயர். மேல் சொல்லப்பட்ட 3 விதமானதும் சேர்ந்தது வாஜஜித்யா எனப்படுகிறது. யஜமானனுக்கு எதிர்புரத்திலிருந்து கொண்டு ரித்விக்குகள் விசிறி எரியவேண்டும்.

பொது வழக்கு கூறப்பட்டுள்ளது. உலகிலும் தனக்கு எதிரில் உள்ள பாத்திரத்திலிருந்து அன்னம் உட்கொள்ளப்படுகிறது.

இறங்கும் போது மான்தோலில் ஸ்வர்ணத் வைத்து, ஸ்வர்ணத்தின் மீது வலது காலையும் மான்தோலில் இடது காலையும் வைத்து இறங்க வேண்டும். ஸ்வர்ணத்தின் பரிமாணம் 5 பணம் உள்ளதாக இருக்கவேண்டும்.

அநுவாகம்—10. (वाजस्येमं प्रसवः)

க்ராமத்தில் பயிரிடக்கூடிய 7 (திலம், மாஷம் வ்ரீஹி, யவை, பிரியங்கு, அணு, கோதுமை) தான்யங்களையும், அதே போல் உழாமலேயே காட்டில் பயிராகக்கூடிய மூங்கில் அரிசி, சாமை, நீவாரம், காட்டு எள்ளு, கவீதுகம், மர்கடம், கார்முதம் அல்லது கொள்ளு இவைகளின் ரஸத்தினால் 14 ஹோமங்கள் மந்தரத்துடன் செய்யவேண்டும். கடைசீயில் யஜமானனை மான் தோலில் கிழக்கு முகமாக உட்கார வைத்து இவருக்கு எதிரில் அத்வர்யு இருந்து கொண்டு, தங்கம், வெள்ளி இவைகளை கையில் வைத்துக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொண்டு தலையிலிருந்து முகம் வரை வழியும்படி देवस्यत्वा என்ற மந்தரத்தை சொல்லி அபிஷேகம் செய்யவேண்டும்.

அனுவாகம்—*11*. (अतिरेकाक्षरेण)

ஆச்ராவய என்று தொடங்கி வௌஷட் வரை 17 எழுத்துக்கள் உள்ளன. அதில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களையும் படித்ததினால் அந்த மந்தர பலத்தின் மூலம் வாக் முதலியவைகளை, அக்னி முதலிய தேவர்கள் வென்றனர் என்று கோரப்பட்டுள்ளது.

அனுவாகம்—*12*. (उपयामगृहीतोऽसि नृषदं त्वा)

அதிக்ராஹ்யம் என்ற க்ரஹங்களில் ஸோம ரஸத்தை எடுத்து வைக்க மந்தரங்கள் கூறப் பட்டுள்ளன. ஐந்து மந்தரங்களால் 5 அதிக்ராஹ்ய க்ரஹங்களில் ஸோம ரஸத்தை எடுத்து வைக்க வேண்டும். வேது மந்தரத்தினால் 17 ப்ராஜாபதி தேவதையாக கொண்ட, க்ரஹங்களில் ஸோம ரஸத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் (இதைப் பற்றி விளக்கம் முதல் அஷ்டகம் 3ம் ப்ரச்னத்தில் கூறப்பட்டிருக்கிறது.)

அனுவாகம்—*13*. (अम्वह् मासाः)

*12*வது அனுவாகத்தில் வாஜபேய சம்பந்த மான மந்தரங்கள் முடிந்துவிட்டன. இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகத்தில் காம்யேஷ்டிக்கு வேண்டிய புரோனுவாக்யா, யாஜ்யா மந்தரங்கள் கூறப்பட்டுள்ளன. முதல் யாகம் இந்திரனை தேவதையாகக் கொண்டது. இந்த யாகத்தினுல் யஜமானனுடைய ஞாதி, பந்து இவர்களை அனுகூலமாகச் செய்கிருன். இந்திராணியை தேவதையாகக் கொண்ட யாகம் ராஜாக்களுக்கு சேனைகளை பலமுள்ளதாகவும், உத்தரவுக்கு கீழ்படிந்து நடப்பதாக ஆகும். எப்படி பசு மாடுகள் காலையில் மேய அவிழ்த்துவிட்டால், மறுபடியும் எங்கும் ஓடாமல் மாலையில் யஜமானனுடைய வீட்டிற்கு திரும்புவது போல், சேனைகளும் யஜமானனுடைய உத்தரவுகளை நிறைவேற்றி விட்டு மறுபடியும் அவனிடத்திலேயே பணிவுடன் வந்து நிற்கும். அடுத்த யாகம் மன்யுமான், மனஸ்வான் 'எனப்படுகின்றன. இந்தரனை தேவதையாகக் கொண்டது. இவைகளை செய்வதால் யுத்தத்தில் தைரியத்தினுலும், கோபத்தின் மூலமும் சத்ருவை ஜெயிக்கிருன். இதே இஷ்டியை பொருள் இல்லாதத்தினுலோ, அல்லது ரோகத்தினுலோ, சரியான மனநிலையில்லாதவன் செய்தால் மேற்சொன்ன குறைகள் நீங்கும். தாத்ருத்வ குணமுள்ள இந்திரன் தேவதை, என்னுடைய ஸந்ததி தானத்தை செய்வதில் விருப்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று நினைக்கிற யஜமானன் செய்யவேண்டும். அம்மாதிரி செய்தால் தானத்தில் பற்றுள்ளவர்களாக ஸந்ததிகள் இருப்பார்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள். பிறரை கொடுக்கச் செய்யும் தன்மை உடைய இந்திரன் தேவதை அடுத்த யாகம். கடன் கொடுத்தவன் கடன் வாங்கியவனிட மிருந்து கடனைப் பெற முடியாத நிலை ஏற்பட்ட பொழுது கொடுக்காமலே, (கொடுத்து விட்டதாக சொல்லும்) சொல்பவனிடமிருந்து பணத்தை பெறவேண்டியவன் செய்யவேண்டிய இஷ்டி. இதற்கு வேண்டிய புரோனுவாக்யா மந்திரங்கள் (यदासाँ हवामहे...सध्याल् । यदासादञ्जी...मयस्योः) ॥ அடுத்தது ராஜ்யத்திலிருந்து விரட்டப்பட்ட ராஜா செய்ய வேண்டிய யாகம், திரும்பி ராஜ்யத்தை பெரு வதற்கு. ஸ்ருஷ்டி காலத்தில் இந்திரன் பாக்கி தேவர்களுக்கு சமமாகத்தான் இருந்தான். அதனுல் அவனுடைய உத்தரவுக்கு கீழ்படிபவர் களாக தேவர்கள் இல்லை. ப்ரம்ஹாவின் உதவி யினுல் இந்தரனை தேவதையாகக் கொண்ட யாகத்தை செய்து தேவர்களுக்குள் தலைமை பதவியை அடைந்தான். அந்த யாகத்தின் மந்தரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ராஜ குமாரன் போன்றவர்கள் ஐச்வர்யத்தை அடைய தகுதி இருந்தும் அந்த ஐச்வர்யத்தை அடையாமல் ஐச்வர்யம் இல்லாமல் இருப்பவர்களுக்கு சமமாக இருக்கிருனே அவன் அந்த ஐச்வர்யத்தை அடைய செய்ய வேண்டிய இஷ்டி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதல்காண்டம் 8-வது ப்ரச்னம்

அனுவாகம்—1. (अनुमत्यै पुरोडाशं)

அனுமதி இஷ்டி சொல்லப்படுகிறது. இதைச் சார்ந்த மற்ருெரு கர்மா நிருரிதியை தேவதையாகக் கொண்டது. இரண்டும் தனித் தனி யாகங்கள் ஏனென்ருல் தக்ஷிணை தனித் தனியாக கூறப்பட்டுள்ளது. முதல் யாகத்திற்கு கறவைமாடு தக்ஷிணை இரண்டாவது யாகத்திற்கு கருப்புகரை உள்ள கருப்பு கலர் வேஷ்டி. அனுமதி என்பது எல்லாவிதமான தான்யங்களும் விளையக்கூடிய பூமி. நிருரிதி என்பது எதுவுமே விளைய முடியாத நிலம், எப்படி உலகில் நோயாளிகள் விரும்பத்தகாத நோயை நீக்கிய பிறகு சரீரத்திற்கு புஷ்டிகரமான காரியத்தை செய்வதுபோல், பாபஸ்வரூபியான நிருரிதி தேவதைக்கு இஷ்டியை முதலில் செய்து விட்டு, பிறகு அனுமதி தேவதைக்கு இஷ்டி செய்ய வேண்டும். இந்த 8வது ப்ரச்னத்தில் ராஜஸூய யாகத்திற்கு வேண்டிய யாகங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ராஜஸூய யாகத்தில் பல இஷ்டி யாகங்கள், பசுயாகங்கள், ஸோம யாகங்கள் இவைகள் சேர்ந்துள்ளன, அவைகளுள் முதலில் செய்ய வேண்டியது 7 நாள் அக்னிஷ்டோம ஸோம யாகம். 8வது நாள் அனுமதி இஷ்டி. அதிதியை தேவதை யாகக்கொண்ட சருயாகம்—

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தக்ஷிணை பசு. ஆக்னு வைஷ்ணவ இஷ்டி—பாரம் சுமக்கக்கூடிய குட்டையான காளை தக்ஷிணை, அக்னீஷோமீய யாகம்—தக்ஷிணை ஸ்வர்ணம். இந்தரயாகம்—சுமையை இழுக்கக் கூடியதும் சினையை உண்டாக்கக்கூடிய காளை தக்ஷிணை. அக்னீ—இந்திரன் இவர்கள் இருவரையும் தேவதையாகக் கொண்ட யாகங்கள் சுமையை இழுக்க கூடியதும் சினையாகக் கூடிய காளை தக்ஷிணை. ஐந்தராக்ன புரோடாச யாகம் வைச்வ தேவசரு யாகம், இரண்டும் ஒரே ப்ரயோகம்-தலை கன்றுக்குட்டி தக்ஷிணை ஸோமனை தேவதையாகக் கொண்ட சாமை சருயாகம்—வஸ்தரம் தக்ஷிணை, ஸரஸ்வதி—ஸரஸ்வான் இவர்களை தேவதை யாகக் கொண்ட சருயாகம்—தம்பதிகளான பசுக்கள் தக்ஷிணை.

சாதுர்மாஸ்யம் என்று சொல்லப்படுகிற கர்மாவில் 4 பர்வாக்கள் அடங்கியுள்ளன. வைச்வதேவ பர்வா, வருண ப்ரகாச பர்வா, ஸாகமேத பர்வா, சுனுசீரீய பர்வா, முதல் பர்வா வான வைச்வதேவ பர்வாவிற்கு வேண்டிய 8 யாகங்கள் 2வது அனுவாகத்தில் கூறப்பட்டுள்ளன.

அனுவாகம்—2. (आग्नेयमष्टाकपालं निर्वपति)

1. அக்னியை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

2. ஸோமனை தேவதையாகக் கொண்ட சருயாகம்.
3. ஸவிதாவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்.
4. ஸரஸ்வான் என்பவரை தேவதையாகக் கொண்ட சருயாகம்.
5. பூஷாவை தேவதையாகக் கொண்ட சருயாகம்.
6. மருத்கணங்களை தேவதையாகக் கொண்ட புரோடாசயாகம்.
7. விச்வே தேவர்கள் தேவதையாகக் கொண்ட ஆமிக்ஷா யாகம்.
8. த்யாவா ப்ருதிவீக்களை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்.

வைச்வதேவ பர்வாவை பால்குன அல்லது சைத்ர பௌர்ண்மாஸையிலோ செய்ய வேண்டும். (இத்ற்குறிய ப்ராம்ஹணம் (விளக்க உறை) முதல் அஷ்டகம் 6ம் ப்ரச்னத்தில் கூறப்பட்டுள்ளது. அதனால் இங்கு விளக்கப்படவில்லை)

அனுவாகம்—3. (ऐन्द्राग्नमेकादशकपालं मारुतीं)

இரண்டாவது பர்வாவான வருணப்ராகசத்திற்கு வேண்டிய விசேஷ யாகங்கள் 4 சொல்லப்பட்டிருக்கின்றன. வைச்வதேவ பர்வாவில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூறப்பட்ட முதல் 5. யாகங்கள் பாக்கியுள்ள பர்வாக்களில்கூட செய்ய வேண்டும். பிறகு 6. இந்திராக்னியை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். 7. மருத்கணங்களை தேவதை யாகக் கொண்ட ஆமிக்ஷாயாகம். 8. வருணனை தேவதையாகக் கொண்ட ஆமிக்ஷாயாகம். 9, ப்ரம்ஹாவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்.

முறத்தில் யவமாவுனுல் செய்யப்பட்ட விளக்குகளை வைத்து, அக்னிக்கு கிழக்கே மேற்கு முகமாக இருந்து கொண்டு, தெற்கு வேதி யிலுள்ள அக்னியில் தம்பதிகள் முறத்தினுலேயே ஹோமம் செய்ய மந்தரம் சொல்லப்பட்டிருக் கிறது அவப்ருத ஸ்நாநம் இதற்கு பிறகு ப்ராம்ஹணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அனுவாகம்—4. (अग्नयेऽनीकवते पुरोडाशं)

4, 5, 6வது அனுவாகங்களில் ஸாகமேத பர்வாவைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இது இரண்டு நாள் செய்ய வேண்டிய கர்மா. வருணப்ரகாச பர்வா அனுஷ்டானத்திலிருந்து நான்காவது பௌர்ணமியிலிருந்து பிரதமை வரை செய்யவேண்டும். இதிலும் வைச்வதேவ பர்வா வில் சொல்லப்பட்ட முதல் 5 யாகங்கள் செய்ய வேண்டும். பிறகு அனீக்வான் என்ற குணத் தோடு கூடிய அக்னியை தேவதையாகக் கொண்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புரோடாச யாகம், ஸூரிய உதய காலத்தில் செய்ய வேண்டும். ஸாந்தபனம் என்ற குணமுள்ள மருத்கணங்களை தேவதையாகக் கொண்ட சரு யாகம் உச்சி வேளையில் செய்யவேண்டும். மாலை யில் க்ருஹமேதீ என்ற மருத்கணங்களை தேவதை யாகக்கொண்ட, பாலில் பக்வம் செய்த சருயாகம். பிறகு சரு பக்வம் செய்யும்போது மேலே வரும் கெட்டியான பால் பாகம் (ஏடு) எடுத்து மந்தரத் துடன் ஹோமம் செய்யவேண்டும். இரண்டாம் நாள் ஸூரிய உதய காலத்தில் மருத்கணங்களை தேவதையாகக் கொண்டு க்ரீடீ என்ற குண முள்ள புரோடாச யாகம் செய்ய வேண்டும். இதற்கு பிறகு பூர்வாஹ்னத்தில் செய்ய வேண்டிய மஹாஹவிர் யாகங்கள். வைச்வதேவ பர்வாவில் சொல்லப்பட்ட ஆக்னேயம், ஸௌம் யம், ஸாவித்ரம், ஸாரஸ்வதம், பௌஷ்ணம் முதலிய யாகங்கள், வருணப்ரகாசத்தில் கூறப் பட்டுள்ள ஐந்த்ராக்ன யாகம், இந்திரனை தேவதை யாகக் கொண்ட சரு யாகம், விச்வகர்மாவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்.

அனுவாகம்—5. (सोमाय पितृमते पुरोडाशं)

அபராஹ்ணத்தில் செய்ய வேண்டிய மஹா பித்ரு யக்ஞம் சொல்லப்படுகிறது. மூன்று ப்ரதான யாகங்கள் சொல்லப்பட்டன. 1 பித்ரு மானுன ஸோமனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். 2. பர்ஹிஷத் பித்ருக்களை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவதையாகக் கொண்ட வருத்த யவையை த்ரவ்யமாக கொண்ட யாகம். 3. அக்னீஷ் வாத்தா என்ற பித்ருக்களை தேவதையாகக் கொண்ட இறந்த கன்றையுடைய மாட்டின் பாலில் யவமாவை கலந்த த்ரவ்யமாகக் கொண்ட யாகம். பிறகு உபஸ்தான மந்தரங்கள்.

அனுவாகம்—6. (प्रतिपूरुषमेककपालान् निर्वपति)

த்ரயம்பக யாகம்—ருத்ரனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். யஜமானன் வீட்டிலுள்ள ஸந்ததிகளுடைய எண்ணிக்கை ப்ரகாரம் புரோடாசங்கள்; வருங்கால ஸந்ததிக்கு ஒரு புரோடாசமும், எல்லா புரோடாசங்களும் சேர்ந்தால் போல் செய்ய வேண்டும். இந்த யாகத்தை நாற்சந்தியில் செய்ய வேண்டும். அக்னி ப்ரதக்ஷிணம். புரோடாசத்தை துணியில் மூட்டை கட்டி மந்தரத்துடன் மரத்தில் கட்டிவிட வேண்டியது. ருத்ரனுக்கு பாகமாக—திரும்பி பாராமல் வரவேண்டியது.

அனுவாகம்—7. (ऐन्द्राग्नमेकादशकपालं वैश्वदेवं)

இந்த அனுவாகத்தில் சுனுசீரீய பர்வா சொல்லப்படுகிறது. அத்துடன் இந்திரதுரீயம் என்ற யாகம் சொல்லப்படுகிறது. இதைத்தவிர அபாமார்க ஹோம மந்தரங்கள் சொல்லப்பட்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

டிருக்கின்றன. இந்திராக்னியை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். வைச்வதேவ சரு யாகம். சுனுசீர (வாயு, சூரியன் இவர்களோடு கூடிய) என்ற இந்திரனை தேவதையாகக் கொண்ட, புரோடாச யாகம், வாயுவை தேவதை யாகக் கொண்ட, பாலை த்ரவ்யமாக கொண்ட யாகம், சூரியனை தேவதையாக் கொண்ட புரோடாச யாகட் —12 காளை மாடுகளை பூட்டிய கலப்பைகள் தக்ஷிணை. வைச்வதேவ பர்வாவில் சொல்லப்பட்ட முதல் 5 யாகங்கள் இதிலும் உண்டு. இந்திர துரீய யாகத்திற்கு வேண்டிய த்ரவ்யங்களும் தேவதைகளும்—அக்னியை தேவ தையாகக் கொண்ட புரோடாச யாகம். ருத்ரனை தேவதையாகக் கொண்ட கரவீ துகத்தினுல் (காட்டில் விளைந்த தான்ய விசேஷம்) செய்யப்பட்ட சரு யாகம். இந்திரனை தேவதையாகக் கொண்ட ததி (தயிர்) யாகம். வருணனை தேவதையாகக் கொண்ட யவையினுல் செய்யப்பட்ட 'சரு யாகம். சுமக்கக் கூடிய கறவை மாடு தக்ஷிணை. பஞ்ச இத்மிய யாகத்திற்கு வேண்டிய மந்தரங்கள். மூன்று குதிரைகள் பூட்டப்பட்ட ரதம் இதற்கு தக்ஷிணை. அபாமார்கஹோம மந்தரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு இடுப்பில் கட்டின வேஷ்டி தக்ஷிணை.

அனுவாகம்—8 (धात्रे पुरोडाशं द्वादशकपालं)

தேவிகா முதலிய 6 கர்மாக்கள் ஒரே நாளில் செய்யப்படவேண்டியது. தாத்ரு தேவதையாக்க்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொண்ட புரோடாச யாகம். அநுமதியை தேவதையாகக் கொண்ட சருயாகம். ராகாவை தேவதையாகக் கொண்ட சருயாகம். ஸினீ வாலியை தேவதையாகக் கொண்ட சருயாகம். குஹூவை தேவதையாகக் கொண்ட சரு யாகம். இதற்கு தக்ஷிணை இரண்டு பசுக்கள். அக்நு விஷ்ணுவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். இந்திர-விஷ்ணுவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். விஷ்ணுவை தேவதை யாகக் கொண்ட புரோடாச யாகம். இதற்கு சுமை இழுக்கக்கூடிய குட்டையான காளை தக்ஷிணை. அக்னீஷோம தேவதையை தேவதை யாகக் கொண்ட புரோடாச யாகம். இந்திரன்-ஸோமனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். ஸோமனை தேவதையாகக் கொண்ட சருயாகம்---காராம் பசு தக்ஷிணை. ஸோமனையும் பூஷாவையும் தேவதையாகக் கொண்ட சருயாகம். இந்திரனையும் பூஷாவையும் தேவதையாகக் கொண்ட சருயாகம். பூஷாவை தேவதையாகக் கொண்ட சருயாகம்—கருப்பு நிற மாடு இதற்கு தக்ஷிணை. வைச்வாநராக்னியை தேவதையாகக் கொண்ட புரோடாசயாகம்—இதற்கு தங்கம் தக்ஷிணை. வருணனை தேவதையாகக் கொண்ட யவைனுல் செய்யப்பட்ட சருயாகம்—இதற்கு குதிரை தக்ஷிணை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—9. ((बार्हस्पत्यं चरुं निर्वपति)

11 ரத்னி யாகங்கள்—சொல்லப்படுகின்றன. ப்ரஹஸ்பதியை தேவதையாகக் கொண்ட சரு யாகம். இதை க்ஷத்ரியன், ப்ரம்ஹாவாக இருக்கின்ற ரித்விக்குனுடைய க்ரஹத்தில் செய்ய வேண்டும். பின்புறம் வெளுப்பாக இருக்கக் கூடிய பசுமாடு தக்ஷிணை. இந்திரனை தேவதை யாக கொண்ட புரோடாச யாகம். க்ஷத்ரியன் வீட்டில் செய்யவேண்டும், காளை மாடு தக்ஷிணை அதிதியை தேவதையாகக் கொண்ட சருயாகம். பட்டமஹஷியின் வீட்டில் செய்யவேண்டும். கறவைமாடு தக்ஷிணை. நிருரிதியை தேவதையாகக் கொண்ட சருயாகம். ப்ரீதி இல்லாத அரசின் வீட்டில் செய்யவேண்டும். கருப்பு நெல்லை கை யால் உமியை நீக்கி சரு செய்ய வேண்டும். கருப்பாயும், கொம்பு உடைந்ததுமான பசுமாடு தக்ஷிணை. அக்னியை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். சேனுதிபதி வீட்டில் செய்ய வேண்டும். ஹிரண்யம் தக்ஷிணை. வருணனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம், தேரோட்டியினுடைய வீட்டில் செய்யவேண்டும். ரோகத்திறுல் பீடிக்கப்பட்ட பீஜத்தை உடைய (वृषणं) காளைமாடு தக்ஷிணை. மருத்கணங்களை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். இதை க்ராமத்தின் தலைவன் வீட்டில் செய்ய வேண்டும். வெள்ளை பசுமாடு தக்ஷிணை. ஸவிதாவை தேவதை யாகக் கொண்ட புரோடாச யாகம். அந்தப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புறத்தில் காவல் புரிபவனுடைய வீட்டில் செய்ய வேண்டும்—பலநிறமுள்ள பசுமாடு தக்ஷிணை. அச்வினீ தேவர்களை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். கஜானுவுக்கு அதிபதியின் வீட்டில் செய்ய வேண்டும்—ஒரே மாட்டிற்கு பிறந்த இரண்டு கன்று குட்டிகள் தக்ஷிணை. பூஷாவை தேவதையாகக் கொண்ட மாவினால் (பிஷ்டை) செய்யப்பட்ட சருயாகம். ராஜாவின் பொருட்டு வரி வசூலிப்பவன் வீட்டில் செய்ய வேண்டும். கருப்பு பசுமாடு தக்ஷிணை. ருத்ரனை தேவதையாகக் கொண்ட சரு யாகம் காட்டு கோதுமையினால் தயாரிக்கப்பட்ட சருயாகம்—சூதாட்டகாரனின் வீட்டில் செய்யவேண்டும். நீண்ட வாலையுடைய சித்ர வர்ணமுடைய பசுமாடு தக்ஷிணை. நன்கு பரிபாலிக்கின்ற இந்திரனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். தன்னுடைய வீட்டில் ஒரு பகுதியிலும், பாபத்தை போக்க வல்ல இந்திரனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம் மற்றொரு பகுதியில் செய்ய வேண்டும். யஜமானனுடைய ஆசீர்வாதத்தை ப்ரார்த்திக்கின்ற மந்தரம் சொல்லப்பட்டிருக்கிறது.

அபிஷேசனீயம் என்கிற ஸோமயாகத்திற்கு அங்கமான தீக்ஷணீய இஷ்டிக்கு பதிலாக புதிய யாகம் சொல்லப்பட்டிருக்கிறது. மித்ரனையும், ப்ரஹஸ்பதியையும் தேவதையாகக் கொண்டது. அதில் ப்ரஹஸ்பதிக்கு பாலில் சரு செய்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹோமம் செய்யவேண்டும். மித்ரனுக்கு நெய்யில் பக்வம் செய்த சருவை யாகம் செய்யவேண்டும். சில பழம் புஷ்பம் இவைகளின் ரஸம் உட்புறத்தில் பூசப்பட்ட தொன்னையில் வெள்ளை கன்று உடைய வெள்ளை மாட்டிலிருந்து பாலை கறந்து, தானுகவே விழுந்த கிளையில் செய்யப்பட்ட சதுரமான பாத்திரத்தில் காய்ச்சி தொன்னையில் விட்டு, இயற்கையாகவே (தொன்னையில் உள்ளே பூசப் பட்ட ரஸத்தின் மகிமையால்) தயிராகி அதில் இலந்தப்பழம் போன்ற பழ சேர்க்கையினுல் மோராக ஆகி, அதில் இயற்கையாக உண்டான வெண்ணையை வெய்யிலில் உருக்கப்பட்ட நெய் யினுல் சரு யாகம் செய்யவேண்டும். அரிசி தயாரிக்கும் போது குருணை அரிசியை பாலில் சரு வாக செய்து ப்ரஹஸ்பதிக்கும், முழு அரிசியை மேல் சொன்ன நெய்யில் சருபாகம் செய்து மித்ரனுக்கும் ஹவிஸ்ஸாக கொடுக்க வேண்டும். இந்த இஷ்டிக்கு யாகம் செய்யவேண்டிய இடம் ரித்விக்குகளால் செய்யப்படாமல் தானுகவே தயாரானதாக (வேதி) இருக்கவேண்டும். அதே மாதிரி தானுகவே உதிர்ந்த தர்பைகளாலும், சமித்தையும் தயாரித்து 'உபயோகிக்கவேண்டும். வெள்ளை கன்றோடு கூடிய வெள்ளை கறவை மாடு தக்ஷிணை.

அனுவாகம்—10. (अग्नये गृहपतये पुरोडाशं)

தேவஸ்வ ஹவிஸ்ஸுகள் சொல்லப் படுகின்றன. இவைகள் அபிஷேசனீய ஸோம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகத்திற்கு அங்கமான பசு புரோடாச யாகத்தை யொட்டி செய்யப்படவேண்டியவை. க்ருஹபதி என்ற அக்னியை தேவதையாகக் கொண்ட புரோடாசத்தை கருப்பு நெல்லினுல் யாகம் செய்யவேண்டும். வனஸ்பதி என்கிற ஸோமனை தேவதையாகக் கொண்ட சாமை தான்யத்தினுல் செய்யப்பட்ட சருயாகம், பலனை கொடுக்கக் கூடிய உத்தரவை அளிக்கின்ற ஸவிதா தேவதை யாகக் கொண்ட இரண்டு மாதத்தில் விளையக் கூடிய நெல்லினுல் புரோடாசத்தினுல் செய்ய வேண்டிய யாகம், பசுபதியானருத்ரனை தேவதை யாகக் கொண்டு, காட்டு கோதுமையினுல் செய்யப்பட்ட சருயாகம். வாக்பதியான ப்ரஹ ஸ்பதியை தேவதையாகக் கொண்ட நீவார தான்யத்தினுல் செய்யப்பட்ட சருயாகம். ஜேஷ்டனுன இந்திரனை தேவதையாகக் கொண்ட பெரிய நெல்லினுல் செய்யப்பட்ட புரோடாச யாகம். ஸத்யனுன மித்ரனை தேவதையாகக் கொண்ட ஆம்பா என்ற தான்யத்தினுல் செய்யப் பட்ட சருயாகம். தர்மபதியான வருணனை தேவதையாகக் கொண்ட யவத்தினுல் செய்யப் பட்ட சருயாகம்.

அனுவாகம்—11. (अर्थेतस्थापस्थेति)

அபிஷேகதிற்காக வேண்டிய ஜல சம்பந்தப் பட்ட மந்தரங்களும், ஜலங்களின் பெயர்களும், ஜலங்களை க்ரஹத்தில் எடுத்துவைக்க வேண்டிய மந்தரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—12. (देवीरापस्सं मधुमतीः)

க்ரஹங்களில் ஜலத்தை தூய்மையாக்க வேண்டிய மந்தரங்கள்.

அனுவாகம்—13. (समिधमा तिष्ठ गायत्री)

திக்குகளை நோக்கி விஜய் யாத்ரை செய்வதற்காக சொல்லவேண்டிய மந்தரங்கள. அதற்கு வேண்டிய ஹோமங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

அனுவாகம் - 14. (सोमस्य त्विषिरसि)

யஜமானனுக்கு அபிஷேகம் சொல்லப்பட்டிருக்கிறது. மைத்ரா வருணனுடைய மேடைக்கு முன்புறத்தில் அத்திக் கட்டை ஆசனத்தில் புலித்தோலை விரித்து. ஐந்து பணம் எடையுள்ள தங்கத்தை வைத்து, அதில் யஜமானனை உட்கார வைத்து அபிஷேகம் செய்யவேண்டிய மந்தரம் சொல்லப்பட்டிருக்கின்றன.

அனுவாகம்—15. (इन्द्रस्य वज्रोऽसि वार्त्रघ्नः)

இதில், ரதத்தில் உட்கார்ந்து விஜய யாத்ரை செய்வதற்கு வேண்டிய மந்தரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு வேண்டிய ஹோமங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

அனுவாகம்—16. (मित्रोऽसि वरुणोऽसि समहं)

இந்த அனுவாகத்தில் விஜய யாத்ரையை முடித்துக் கொண்டு வந்த யஜமானனை உயர்ந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆசனத்தில் அமர்த்தி எல்லோரும் அவரை மந்தர பூர்வமாக ஸேவிப்பது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அவப்ருத இஷ்டி செய்து விட்டு ஜலம் முதலிய இடங்களில் ஹோமம் செய்ய மந்தரங்கள்.

அனுவாகம்—17. (आग्नेयमष्टाकपालं निर्वपति)

ஸம்ஸ்ருப் ஹவிஸ்ஸு என்கிற 10 யாகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆக்னேய புரோடாச யாகம் தக்ஷிணை ஹிரண்யம். ஸரஸ்வத்தேவதாகமான சருயாகம்—பால் மறந்த கன்று குட்டி தக்ஷிணை ஸவித்ரு தேவதாகமான புரோடாச யாகம்—பல நிறமுள்ள பசுமாடு தக்ஷிணை. பூஷாவை தேவதையாகக் கொண்ட சருயாகம். கருப்பு பசு மாடு தக்ஷிணை. ப்ரஹஸ்பதியை தேவதையாகக் கொண்ட சருயாகம், வெள்ளை யான பின்பாகத்தை உடைய பசு தக்ஷிணை. இந்திரனை தேவைதயாகக் கொண்ட புரோடாச யாகம்—பொலிகாளை தக்ஷிணை. வருணனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்—நோயால் பீடிக்கப்பட்ட பீஜத்தை உடைய காளை தக்ஷிணை. ஸோமனை தேவதையாகக் கொண்ட சருயாகம்—காராம் பசு தக்ஷிணை. த்வஷ்டாவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்—வெள்ளை பசு தக்ஷிணை. விஷ்ணுவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்—குட்டை பசு தக்ஷிணை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—18. (सद्योदीक्षयन्ति)

தசபேயம் என்கிற ஸோமயாகத்தை பற்றி சில விசேஷ தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸாதாரண ஸோம யாகத்தில் முதல் நாள் தீக்ஷை ஆரம்பம். இரண்டாம் நாள் ஸோம லதையை வாங்குதல். இவைகளுக்கு பதிலாக இந்த யாகத்தில் ப்ரதான யாகதினத்திலேயே தீக்ஷை செய்துகொள்ள வேண்டும். அன்றே ஸோம லதையை வாங்க வேண்டும். ஜலத்தில் ஸ்நாநம் செய்வதற்கு பதிலாக 12 தாமரைகளால் செய்யப்பட்ட மாலையை போட்டுக் கொண்டு கழற்றி கீழே போடவேண்டும். 10 பால் மறந்த கன்று குட்டிகளால் ஸோம லதையை வாங்க வேண்டும். 10 அதிகப்படி சமஸ பாத்திரங்கள் வைக்க வேண்டும். 100 ப்ராம்மணர்கள் அந்த 10 சமஸ பாத்திரத்தில் உள்ள ஸோமரஸத்தை பருக வேண்டும். 17 ஸ்தோமத்தை உடைய ஸ்தோத்திரம் உண்டு, அத்வர்யுவிற்கு தங்க கண்ணாடியை கொடுக்கவேண்டும். தங்க சங்கிலியை உத்காதாவிற்கு கொடுக்கவேண்டும். ஹோதாவிற்கு தங்ககாசு தக்ஷிணை. ப்ரஸ்தோதா ப்ரதிஹாதா இருவருக்கும் சேர்ந்து ஒரு குதிரை கொடுக்க வேண்டும். 12 இளஞ்சினை மாடுகள் ப்ரம்ஹாவிற்குக் கொடுக்க வேண்டும் மைத்ரா வருணனுக்கு மலடு பசு தக்ஷிணை. ப்ராம்மணாச் சம்ஸி என்பவருக்கு பொலி காளை தக்ஷிணை நேஷ்டா, போதா இருவருக்கும் இரண்டு வேஷ்டி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள் தக்ஷிணை. அச்சாவாகனுக்கு வண்டி தக்ஷிணை. ஆக்னீத்ரருக்கு சுமை இழுக்கக் கூடிய காளை தக்ஷிணை. ஹோதா ப்ருகு கோத்ரத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். ப்ராம்ஹண சம்ஸி சொல்லக்கூடிய ஆஜ்ய ஸ்தோத்ரத்தில் காயத்ர ஸாமாவிற்கு பதிலாக ச்ராயந்தீயம் என்ற ஸாமாவை பாட வேண்டும். அக்னிஷ்டோம ஸ்தோத்ரத்தில் யக்ஞா யக்ஞீயம் என்ற ஸாமாவிற்கு பதிலாக வாரவந்தீயம் என்கிற ஸாமாவை கானம் செய்யவேண்டும். ஓடுகிற ஜலத்தை (வஸதீவரீ) எடுத்து வைப்பதற்கு பதிலாக ஸரஸ்வதீ நதி ஜலத்தை எடுத்து வைக்க வேண்டும்.

அனுவாகம்—19. (आग्नेयमष्टाकपालं निर्वपति हिरण्यं)

திசாம் அவேஷ்டிகள் என்ற யாகமும், இரண்டு பசு யாகமும், ஸாத்ய தூத ஹவிர்யாகங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆக்னேய புரோடாச யாகம் ஸ்வர்ணம் தக்ஷிணை. இந்திரனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம் - காளை தக்ஷிணை. விச்வே தேவர்களை தேவதையாகக் கொண்ட சருயாகம், செம்பட்ட நிறமான பசு தக்ஷிணை. மித்ராவருணர்களை தேவதையாகக் கொண்ட ஆமிக்ஷா யாகம் - மலடு மாடு தக்ஷிணை. ப்ரஹஸ்பதியை தேவதையாகக் கொண்ட சரு யாகம் - பின்புறம் கருப்பு நிறமுள்ள பசு தக்ஷிணை. அதிதியை தேவதையாகக் கொண்ட பசு யாகம்-

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கழுத்தில் தொங்கும் சதையை உடைய கர்ப்பிணி யான ஆடுதான் ஹவிஸ். மருத்கணங்களை தேவதையாகக் கொண்ட பசு யாகம்—வெள்ளை நிறமுள்ள ஆடு ஹவிஸ். அச்வினீக்களையும், பூஷாவையும் தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். ஸத்யவாக்கான ஸரஸ்வானை தேவதை யாகக் கொண்ட சருயாகம். வீணுகாத உத்தரவு போடக்கூடிய ஸவிதா தேவதையாகக கொண்ட புரோடாச யாகம். மூன்று வில்களை கொண்ட தோலினுல் செய்யப்பட்ட வில்லு வைக்கும் பை தக்ஷிணை.

அனுவாகம்—20. (आग्नेयमष्टाकपालं निर्वपति सौम्यं)

ப்ரயுக் ஹவிஸ்ஸுகள் சொல்லப்படுகின்றன. ஆக்னேய புரோடாச யாகம். ஸோமனை தேவதை யாகக் கொண்ட சருயாகம். ஸவிதாவை தேவதை யாகக் கொண்ட புரோடாச யாகம். ப்ரஹஸ் பதியை தேவதையாகக் கொண்ட சருயாகம். த்வஷ்டாவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். வைச்வாநர புரோடாச யாகம் - ரதத்தை இழுத்துச் செல்லக் கூடிய வண்டியின் வலது புறத்தில் பூட்டப்பட்ட காளை தக்ஷிணை. ஸரஸ்வானை தேவதையாகக் கொண்ட சருயாகம். பூஷாவை தேவதையாகக் கொண்ட சருயாகம். மித்ரனை தேவதையாகக் கொண்ட சரு யாகம். வருணனை தேவதையாகக் கொண்ட சருயாகம். க்ஷேத்ரபதியை தேவதையாகக் கொண்ட சரு யாகம். அதிதியை தேவதையாகக் கொண்ட சரு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகம். இதற்கு ரதத்தை இழுக்கக் கூடிய வண்டியின் இடது புறத்தில் பூட்டப்பட்ட காளை தக்ஷிணை.

அனுவாகம்—21. (स्वाद्वीं त्वा स्वादुना)

ஸௌத்ராமணி யாகத்தின் மந்தரங்கள், பசுக்கள், ஹவிர்யாகங்கள் சொல்லப்படுகின்றன. ''ஸ்வாத்வீன்த்வா'' என்ற மந்தரத்தினுல் இளம் புல்லோடு கல்லை சேர்க்கவேண்டும். அச்வினிகளை தேவதையாகக் கொண்ட பசு யாகம். பசு (ஆடு) சாம்பல் நிறமாக இருக்க வேண்டும். ஸரஸ்வானை தேவதையாகக் கொண்ட செம்மறியாட்டை ஹவிஸ்ஸாக கொண்ட பசுயாகம். இந்திரனை தேவதையாகக் கொண்ட, காளையை த்ரவ்யமாக கொண்ட பசுயாகம். இந்திரனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். ஸவிதாவை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம். வருணனை தேவதையாகக் கொண்ட புரோடாச யாகம்—பெண் குதிரை தக்ஷிணை. இத்துடன் ராஜஸூய யாகம் முடிந்தது.

அனுவாகம்—22. (यन्नाविष्णू महिवद्वां)

காம்யேஷ்டிக்கு வேண்டிய யாஜ்யா புரோனுவாக்யா மந்தரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு வேண்டிய இஷ்டிகள் இரண்டாம் காண்டம், இரண்டாம் ப்ரச்னத்தில் கூறப்பட்டிக்கின்றன.

முதல்காண்டம் முற்றிற்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1. ஸ்துதிகுஸுமாஞ்ஜலி:
2. க்ஷேத்திராடனம் பாரதம்
3. லீலாவிபூதிகள் மூன்று பாகங்கள்
4. விவாஹம் 3 பாகங்கள்
5. கிருஷ்ண யஜுர்வேத ஸாரம் 16 பாகங்கள்
6. கபர்திகாரிகை
7. ஸ்ரீ மஹாகணபதி ஹோமம்
8. மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்
9. புருஷ ஸூக்த ஹோமம்
10. ஸ்ரீ மஹாஸுதர்சன ஹோமம்
11. ஸ்ரீ ஸூக்த ஹோமம்
12. ஸ்ரீ சண்டி ஹோமம்
13. ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்கள் சுருக்கம்
14. ஸ்ரீருத்திரம் ஜடை
15. மந்த்ரப்ரச்னம்
16. ஸ்ரீருத்திரம் சமகம் கனம்
17. க்ருஷ்ண யஜுர்வேத ஆபஸ்தம்ப ஸூத்ர ஸம்ஸ்கார 47 புத்தகங்கள்

மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்கும் இடம் :

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi